தமிழ்Mirror
www.tamilmirror.lk
SATURDAY, JULY 2, 2022
சனிக்கிழமை ஜூலை 02, 2022 | ஒளி: 08 கதிர்: 038 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE

# நாட்டின் பணவீக்கம் 54.6 சதவீதமாக அதிகரிப்பு



### உணவுப் பணவீக்கம் 80.1 சதவீதமாக பதிவு

### உணவில்லாப் பணவீக்கம் 42.4 சதவீதத்துக்கு அதிகரித்தது

### மே மாதத்துடன் ஒப்பிடுகையில் 15.5 சதவீத அதிகரிப்பு

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெணுக்கு அமைவாக கடந்த மே மாதத்தில் 39.1 சதவீதமாக காணப்பட்ட பணவீக்கமானது, ஜூன் மாதத்தில் 54.6 சதவீதத்திற்கு அதிகரித்து கணிசமானளவால் உயர்வடைந்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

**இவ்வருடம் முதல் அரையாண்டில் பணவீக்க அதிகரிப்பு**

ஜனவரி : 14.2%
பெப்ரவரி : 15.1%
மார்ச் : 18.7%
ஏப்ரல் : 29.8%
மே : 39.1%
ஜூன் : 54.6%

---

தேசபந்து உள்ளிட்ட மூன்று பொலிஸாருக்கு எதிராக

## மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மனு



உயிர்த்த ஞாயிறு தின தொடர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமல்செய்து, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் மேலும் இரு பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ரிட் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸ் மா அதிபருக்கும், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் உத்தரவிடக் கோரியே, கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இந்த ரிட் மனுவை தாக்கல் செய்துள்ளார்.

தொடர்ச்சி P2

---

சைக்கிள் விலைகளும்

## 50 ஆயிரத்தை தாண்டுகிறது

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில், மக்கள் சொந்த வாகன பயன்பாடுகளை குறைத்துக்கொண்டு பொதுப்போக்குவரத்தை பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். எனினும் பஸ்கள் மற்றும் ரயில் சேவைகள் பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளதை அடுத்து பொதுமக்கள் சைக்கிள்களை பயன்படுத்தும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.



சைக்கிள்களை கொள்வனவு செய்வதற்காக, நாட்டின் பல பாகங்களிலும் உள்ள சைக்கிள் விற்பனை நிலையங்களை மக்கள் நாடுவதை அவதானிக்க முடிந்துள்ளது.

தொடர்ச்சி P2

---

## 97% மக்களின் நம்பிக்கையை இழந்துள்ளது அரசாங்கம்

### ‘வெறிட்டே ரிசேச்’ நிறுவனத்தின் கருத்துக்கணிப்பில் தெரிவிப்பு

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார வீழ்ச்சி தொடர்பில் அரசாங்கம், நாடு மற்றும் பொருளாதாரம் குறித்து மக்களின் கருத்துக்கணிப்பு அறிக்கையொன்றை இலங்கையின் பிரபல சுயாதீன ஆய்வு நிறுவனமான ‘வெறிட்டே ரிசேச்’ நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. ஜூன் மாதத்தில் மக்களின் நம்பிக்கை, திருப்திக்கு அமைவாக அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தின் மீது 97 சதவீதமான மக்களுக்கு நம்பிக்கை இழக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

---



## அதிக விலைக்கு விற்றால் முறைப்பாடு செய்யுங்கள்

### லாப் நிறுவனம் கோரிக்கை

எரிவாயு சிலிண்டர்களை பொதுமக்கள் பெற்றுக்கொள்ள அதிக சிரமங்களை எதிர்கொண்டுள்ள நிலையில், நுகர்வோருக்கு எரிவாயு சிலிண்டர்களை விரைவாக வழங்குவதற்காக அதன் விநியோக நடவடிக்கைகளை விரிவுபடுத்தவுள்ளதாக லாப் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

---

## உறவுகளைப் பேணி உதவுவோம்

### ஜப்பானிய தூதுவர் ஜனாதிபதியிடம் தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டம் மற்றும் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தி, தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவதாக ஜப்பான் தூதுவர் ஹிடேக்கி மிசுகோஷி தெரிவித்துள்ளார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நேற்று (01) இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இலங்கையுடனான பொருளாதார, சமூக மற்றும் கலாசார உறவுகளை தொடர்ந்து பேணுவதாகவும் ஹிடேகி மிசுகோஷி தெரிவித்தார். இலங்கைக்கு ஜப்பான் வழங்கிய ஆதரவுக்கு ஜனாதிபதி, தூதுவருக்கு தமது நன்றியைத் தெரிவித்தார்.

---

பொருளாதார பிரச்சினைகளுக்கு

## தீர்வு காண ஒத்துழைப்போம்

### ஜனாதிபதியிடம் தெரிவித்தார் அமெரிக்க தூதுவர்



பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான உறவுகளை வலுப்படுத்துவதற்கு அமெரிக்கா ஆதரவளிப்பதாக அந்நாட்டில் இருந்து வருகை தந்த உயர்மட்ட இராஜதந்திரக் குழு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

---

## தவறுகளை சரிசெய்ய அரசாங்கம் தயாரில்லை

அரச நிர்வாகத்திலும், நியமனங்களிலும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான எதிர்ப்பையும் விமர்சனங்களையும், அரசாங்கம் சம்பாதித்துள்ளது. முக்கியமான தவறுகளை திருத்திக்கொள்ள இன்னமும் அரசாங்கம் தயாராக இல்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (1) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

கடந்த தேர்தலில்



பிரதான பிரசாரமாக முன்னெடுக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு என்ற விடயம், இன்று பூச்சியமாக மாறியுள்ளது.

தொடர்ச்சி P2

---

அரசாங்கத்தை எதிர்த்து

## வீதிக்கு இறங்கினர் சட்டத்தரணிகள்

அரசாங்கத்தின் செயற்பாடுகளை கண்டித்து, ‘ மக்களை துன்புறுத்தும் அரசாங்கத்தை வெளியேற்றுவோம்’ எனும் தொனிப்பொருளில் சட்டத்தரணிகள் நேற்று ( 01) வீதியிலிறங்கி பாரிய சத்தியாக்கிரக போராட்டத்தை முன்னெடுத்தனர். கொழும்பு, புதுக்கடை நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக நேற்று முற்பகல் 9.00 மணியளவில் சத்தியாக்கிரக போராட்டத்தை ஆரம்பித்தனர்.

தொடர்ச்சி P2




---

சர்வதேசத்துக்கு பொய்யான வாக்குறுதிகளை கொடுக்கின்றமையே

## இலங்கை தனித்துவிடப்படக் காரணம்

இதுவரை காலமாக சர்வதேச நாடுகளுடன் நெருக்கமான நட்புறவை கையாண்டுவந்த இலங்கை, கடந்த இரண்டு ஆண்டுகளில் உலகில் தனித்துவிடப்பட்ட நாடாக மாறியுள்ளது என்பதே உண்மையாகும். யுத்த காலகட்டத்தில் சர்வதேச நாடுகளுக்கு நாம் கொடுத்த வாக்குறுதிகள் யுத்தத்திற்கு பின்னர் உண்மையாகவும், நேர்மையாகவும் அமையவில்லை என முன்னாள் வெளிவிவகாரத்துறை



அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

---

‘கோட்டா கோ கம’

## செயற்பாட்டாளர்களான லஹிரு உள்ளிட்ட மூவருக்கு பிணை

கடந்த ஜூன் மாதம் 09 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ‘கோட்டா கோ கம’ செயற்பாட்டாளர்களான லஹிரு வீரசேகர, வண. ரத்கரவ்வே ஜினரத்ன தேரர், யூடியூபர் ரதிந்து சேனாரத்ன ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

---

## திடீர் அறிவிப்பால் மக்கள் அசௌகரியம்

ரயில்வே காவல் அதிகாரிகள், ரயில் என்ஜின் சாரதிகள் உட்பட ரயில்வே ஊழியர்கள் நேற்று (01) திடீர் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக ரயில்வே தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளதை அடுத்து ரயில் சேவையை நம்பி பயணிக்கும் பயணிகள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.



PAGE 1 தொடர்ச்சிகள்

# நாட்டின் பணவீக்கம் 54.6 சதவீதமாக அதிகரிப்பு

அதற்கமைய, உணவுப் பணவீக்கம் மே மாதத்தில் 57.4 சதவீதத்திலிருந்து ஜூன் மாதத்தில் 80.1 சதவீதத்திற்கு அதிகரித்துள்ள அதேவேளை, உணவல்லாப் பணவீக்கம் மேயின் 30.6 சதவீதத்திலிருந்து ஜூன் மாதத்தில் 42.4 சதவீதத்திற்கு அதிகரித்தது.

கடந்த ஒரு மாதகாலத்தில் மரக்கறிகள், உடன்மீன், பாண், அரிசி, பால்மா உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மற்றும் பொதுப்பயன்பாடான போக்குவரத்து, நீர், மின்சக்தி, எரிவாயுக் கட்டணங்கள் போன்ற பொருட்கள், சேவைகளின் விலைகள், கட்டணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே இப் பணவீக்க உயர்விற்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. இப்பணவீக்கம் பெரும்பாலும் வழங்கலுடன் (பொருட்கள், சேவைகள் விநியோகம்) தொடர்புடைய காரணிகளாலேயே தூண்டப்பட்டிருப்பதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மேலும், போக்குவரத்து (பெற்றோல், டீசல், பாடசாலை வான் கட்டணங்கள் மற்றும் பேருந்துக் கட்டணம்), உணவகம் மற்றும் விடுதிகள், கல்வி (இரண்டாம்நிலைக் கல்விக்கான பிரத்தியேக வகுப்புக் கட்டணங்கள்) வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் (திரவப்பெற்றோலிய வாயு மற்றும் பராமரித்தல்/ மீள்கட்டுமானம்), ஆகிய துணை வகைகளில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்களைப் பிரதான காரணமாகக் கொண்டு உணவல்லா வகையினுள் உள்ள பொருட்களின் விலைகள் அதிகரிப்புக்களை வெளிப்படுத்தியுள்ளது.

பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம், 2022 மேயின் 28.4 சதவீதத்திலிருந்து 2022 ஜூனில் 39.9 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை, ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம், 2022 மேயின் 10.2 சதவீதத்திலிருந்து 2022 யூனில் 13.3 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவிக்கின்றது.

## மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மனு

சட்டத்தரணி இஷாரா குணவர்தன ஊடாக அவர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்தத் தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்களை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, தனது இறுதி அறிக்கையை பரிந்துரைகள் பலவற்றை உள்ளடக்கி கடந்த 2021 ஜனவரி 31 ஆம் திகதி தற்போதைய ஜனாதிபதியிடம் கையளித்துள்ளதாக கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மனுவில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில், பொலிஸ் மா அதிபரின் கீழ் செயற்பட்ட இலங்கை பொலிஸில் பணியாற்றும் அதிகாரிகள் உட்பட பல அரச அதிகாரிகளின் கடுமையான அலட்சியம் மற்றும் குறைபாடுகள் பல கண்டறியப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்துள்ளதாகவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மனுவில் மேலும் தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசில குமார மற்றும் பிரதான பொலிஸ் பரிசோதகர் சமிந்த நவரத்ன ஆகியோருக்கு எதிரான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மனுதாரரான கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டுள்ளார்.

## 50 ஆயிரத்தை தாண்டுகிறது

இவ்வாறான சூழ்நிலையில் சைக்கிளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. தற்போதுவரை சாதாரண சைக்கிள் ஒன்றின் விலை, 50 ஆயிரம் ரூபாவைக் கடந்துள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன், புதிய வடிவிலான மற்றும் வெவ்வேறு தொழில்நுட்பங்களுடன் தயாரிக்கப்பட்ட சைக்கிள்கள், ஒரு இலட்சம் ரூபாய் வரையான விலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இணையவழி மலிவு விற்பனை முறையில் அண்மையில் ஒரு சைக்கிள் 185 000 ரூபாய் என நபர் ஒருவர் பதிவிட்டிருந்தார். அதேபோல் சைக்கிள் உதிரிப்பாகங்களின் விற்பனையும் அதிகரித்துள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## 97% மக்கள் நம்பிக்கையை இழந்துள்ளது அரசாங்கம்

இவ்வாறான மோசமான பொருளாதார நெருக்கடி நிலைமையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து நாட்டில் 3 வீதமான மக்களே திருப்பியடைந்துள்ளதாகவும், நாடு இன்று பயணிக்கும் திசை குறித்து 2 சதவீதமான மக்களுக்கே திருப்தி நிலை உள்ளதாகவும் அவர்களின் கருத்துக் கணிப்பில் வெளிப்பட்டுள்ளது.

எனினும் நாட்டின் பொருளாதார நகர்வுகள் குறித்த மக்கள் நம்பிக்கை மிக மோசமாக பதிவாகியுள்ள நிலையில் அது மறை 96 வீதமாக பதிவாகியுள்ளதாகவும் வெறிட்டே ரிசேச் நிறுவனம் தெரிவித்துள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும், அதற்கு இந்த ஆட்சியாளர்களால் முடியுமா என்ற கேள்விக்கு 1.3 வீதமான பொதுமக்களே ஆம் என்ற பதிலை கொடுத்துள்ளதாகவும் அவர்களின் கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீதிக்கு இறங்கினர் சட்டத்தரணிகள்

'ரணில், கோட்டா அரசாங்கத்தின் சூழ்ச்சியை தோற்கடிப்போம்', 'சட்டத்தரணிகளை வேட்டையாடுவதை கைவிடு', 'மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களை வேட்டையாடாதே', 'கோட்டா வீடு செல்' உள்ளிட்ட பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு சத்தியாக்கிரக போராட்டத்தை முன்னடுத்தனர்.

இந் நிலையில் பேரணியாக சென்ற சட்டத்தரணிகளை பொலிஸார் கோட்டை - உலக வர்த்தக மைய கட்டடத்தை அண்மித்த வங்கி மாவத்தை பகுதியில் வீதித் தடைகளை ஏற்படுத்தி முன்னேற விடாது தடுத்தனர். சட்டத்தரணிகள் ஜனாதிபதி மாளிகை நோக்கியே பேரணியாக சென்ற நிலையில், பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு இவ்வாறு அவர்களின் பயணம் கட்டுப்படுத்தப்பட்டது.

## தீர்வு காண ஒத்துழைப்பு வழங்குவோம்

அமெரிக்கா ஜனாதிபதி ஜோ பைடனும் பல சந்தர்ப்பங்களில் மனிதாபிமான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டுக்காகவும் மற்றும் அதன் மனிதாபிமான உதவிகளை வழங்கி அமெரிக்கா ஜனாதிபதி ஜோ பைடன் இலங்கைக்கு வழங்கும் ஆதரவிற்காக ஜனாதிபதி தமது நன்றியைத் தெரிவித்தார்.

இலங்கை எதிர்நோக்கும் தற்போதைய நிலைமையை தாம் அறிந்திருப்பதாகவும், நாடு விரைவில் மீண்டு வருமென நம்புவதாகவும் திருமதி ஜூலி சங் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.





## அதிக விலைக்கு விற்றால் முறைப்பாடு செய்யுங்கள்

இறக்குமதி செய்யப்பட்ட எரிவாயுவை தமது முனையங்களில் மீண்டும் நிரப்பும் பணியில் ஈடுபட்டுள்ளதாக லாப் நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விநியோக முகவர்கள் மற்றும் விற்பனையாளர்கள் மூலம் இந்த நிரப்பப்பட்ட எரிவாயு கொள்கலன்களில் அதிகளவானவற்றை தினசரி விநியோகிக்கவுள்ளதாகவும், எவ்வாறாயினும், மோசடியான வர்த்தகர்கள் அதிகபட்ச சில்லறை விலைக்கு அதிகமாக எரிவாயுவை விற்பனை செய்வதாக தெரியவந்துள்ளது. இவ்வாறான வர்த்தகர்கள் தொடர்பில் 1345 என்ற வாடிக்கையாளர் சேவையை தொடர்பு கொள்ளுமாறு நிறுவனம் கோரியுள்ளது.

## இலங்கை தனித்துவிடப்பட காரணம்

நாம் சர்வதேசத்திற்கு பொய்களை கூறும் நாடாக மாறிவிட்டோம். யுத்தத்தின் போது கொடுத்த வாக்குறுதிகளை நாம் நிறைவேற்றவில்லை. அதுவே எமக்கு எதிரான பல்வேறு பிரேரணைகள் ஜெனீவாவில் எழக் காரணமாக அமைந்தது. அதேபோல் நாமே குற்றங்களை ஏற்றுக்கொண்டு பிரேரணையையும் ஆதரித்தோம். ஆட்சி மாற்றத்தின் பின்னர் மீண்டும் வாக்குறுதிகளை மீறி தீர்மானம் எடுத்தோம். இவ்வாறான முன்னுக்குப்பின் முரணான தீர்மானங்கள், பொய்யான வாக்குறுதிகள் காரணமாக சர்வதேச நாடுகளை முழுமையாக பகைத்துக்கொள்ள காரணமாக அமைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



இராஜதந்திர ரீதியில் கொடுக்கும் வாக்குறுதிகள் மீறப்பட்ட முடியாது. யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ள கலந்துரையாடல்களை முன்னெடுத்தோம். அதேபோல் இப்போதும் நாட்டுக்காக சர்வதேச தரப்புடன் கலந்துரையாடல்களை முன்னெடுக்க வேண்டும். சர்வதேச இராஜதந்திர நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும். இறுக்கமான கொள்கையில் இருந்துகொண்டு தீர்வுகளை காண முடியாது.

தொழிலுக்கு அமர்த்தப்பட்ட பிரதமரே இன்று ஆட்சியில் உள்ளார். இது பிரதமருக்கு மட்டுமல்ல முழு நாட்டிற்கும் அவமானம். அதுமட்டுமல்ல பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டங்கள் தோல்வியில் முடிந்துள்ளதாகவே கருதுகின்றேன். இவர்கள் கூறியதை போன்று வேலைத்திட்டங்களில் வெற்றி காணவில்லை. இதுவே சஜித் பிரேமதாஸ கூறும் விடயங்களை நியாயப்படுத்தக்கூடிய விதத்திலும் அமைந்துள்ளது என தெரிவித்துள்ளார்.

## செயற்பாட்டாளர்களான லஹிரு உள்ளிட்ட மூவருக்கு பிணை

கொழும்பில் உள்ள பொலிஸ் தலைமையகத்திற்கு முன்பாக சட்டவிரோதமாக ஒன்றுகூடியமை மற்றும் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை மற்றும் போராட்டத்தின் போது பொலிஸ் அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை போன்ற குற்றங்களுக்காக அவர்கள் தேடப்பட்ட நிலையில், அவர்களே மருதானை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில் நேற்று (1) ஆம் திகதி வரையில் அவர்கள், கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் கோட்டை நீதவான் நீதிமன்றம் அவர்களை நேற்று சொந்த பிணையில் விடுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதலாவது டெஸ்டில்

## இலங்கையை வீழ்த்திய அவுஸ்திரேலியா

இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டில் 10 விக்கெட்டுகளால் அவுஸ்திரேலியா வென்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், காலியில் கடந்த புதன்கிழமை ஆரம்பித்த

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், பதிலுக்கு தமது

முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா நேற்றைய மூன்றாம் நாள் காலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 321 ஓட்டங்களைப் பெற்றது. நேற்றுக் காலையில் வீழ்த்தப்பட்ட 2 விக்கெட்டுகளையும் அசித பெர்ணாண்டோ வீழ்த்திருந்தார்.

பதிலுக்கு, தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை நேதன் லையன் (4), ட்ரெவிஸ் ஹெட் (4), மிற்செல் ஸ்வப்ஸனிடம் (2) தொடர்ச்சியாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும்





இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றது.

இந்நிலையில், ஐந்து ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கையடைந்தது. இப்போட்டியின் நாயகனாக கமரொன் கிறீன் தெரிவானார்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 212/10 (துடுப்பாட்டம்: நிரோஷன் டிக்வெல்ல 58, அஞ்சலோ மத்தியூஸ் 39, திமுத் கருணாரத்ன 28, பதும் நிஸங்க 23, ரமேஷ் மென்டிஸ் 22, தனஞ்சய டி சில்வா 14 ஓட்டங்கள்.

பந்துவீச்சு: நேதன் லையன் 5/90, மிற்செல் ஸ்வப்ஸன் 3/55, பற் கமின்ஸ் 1/25, மிற்செல் ஸ்டார்க் 1/31)

அவுஸ்திரேலியா: 321/10 (துடுப்பாட்டம்: கமரொன் கிறீன் 77, உஸ்மான் கவாஜா 71, அலெக்ஸ் காரி 45, பற் கமின்ஸ் 26, டேவிட் வோர்னர் 25 ஓட்டங்கள். பந்துவீச்சு: ரமேஷ் மென்டிஸ் 4/112, அசித பெர்ணாண்டோ 2/37, ஜெஃப்ரி வன்டர்சே 2/68, தனஞ்சய டி சில்வா 1/8)

இலங்கை: 113/10 (பந்துவீச்சு: நேதன் லையன் 4/31, ட்ரெவிஸ் ஹெட் 4/10, மிற்செல் ஸ்வப்ஸன் 2/34)

அவுஸ்திரேலியா: 10/0

போட்டியின் நாயகன்: கமரொன் கிறீன்

## தவறுகளை சரிசெய்ய அரசாங்கம் தயாரில்லை

அன்று என்னை பிரதான குற்றவாளியாக மாற்றி, தாம் ஆட்சிக்கு வந்தவுடன் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம் என வாக்குறுதியளித்தனர். ஆகவே அன்று 2019 ஆம் ஆண்டு தேர்தல் பிரசார மேடைகளில் கூறிய தேசிய பாதுகாப்பு குறித்த காரணிகளுக்கு இன்று என்ன நடந்துள்ளது என அரச தலைவர்களிடம் கேட்கின்றேன். குறைந்தபட்சம் இன்று நாட்டில் தேசிய பாதுகாப்பு என்ற ஒரு விடயமெனும் உள்ளதா என கூற வேண்டும்.

அரசாங்கம், பொருளாதார முகாமைத்துவத்தையும் சமூக முகாமைத்துவத்தையும் அரசியல் முகாமைத்துவத்தையும் முழுமையாக தவறாகவே கையாண்டுள்ளது. பதவி நியமனங்களின் போதும் தகுதியானவர்களுக்கு அவற்றை பெற்றுக்கொடுக்கவில்லை. இராணுவ அதிகாரிகளின் நியமனத்தின் போதும் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பாரிய விமர்சனங்களுக்கு உள்ளாகியது. இவற்றை இன்னமும் சரிசெய்துகொள்ள அரசாங்கம் தயாராக இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# “கஞ்சியை குடித்து வாழ்கின்றோம்”

## ‘எரிபொருளைப் பெற்றுத் தாருங்கள்’



ரஸீன் ரஸ்மின்
razeenrasmin87@gmail.com

‘உலகத்தை நேசி; ஒருவரையும் நம்பாதே; உறங்கிய போதும் ஒரு கண்ணை மூடாதே....!’ – இலங்கையின் இன்றைய நிலையை பார்க்கும் போது, ‘ரெட்’ படத்தில் வரும் இந்தப் பாடல்தான் ஞாபகத்துக்கு வருகிறது.

“இனிமேலும் வாழ முடியாது” என்ற விரக்தியின் உச்சியில், இலங்கை மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ‘ஒரு வாசல் மூடினாலும், இன்னொரு வாசல் திறக்கப்படும்’ எனச் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். ஆனால், இலங்கை மக்களை பொறுத்தவரை, அனைத்து வாசல்களும் மூடப்பட்டிருக்கின்றன.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் எரிபொருள் பிரச்சினை என்பது, அரசாங்கத்திற்கு பெரும் தலையிடியாக மாறிக்கொண்டிருக்கிறது. எங்கு சென்று எரிபொருள் கொண்டு வரமுடியும் என்பது பற்றியும் அரசாங்கம் தீவிரமாக ஆலோசனை செய்து வருகிறது.



எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கட்டாருக்கும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ரஷ்யாவுக்கும் சென்றுள்ளனர். எரிபொருள் பெற்றுக்கொள்ளும் நோக்கில் குறித்த இரண்டு அமைச்சர்களும் இவ்வாறு வெளிநாட்டு சென்றுள்ளனர். இவ்வாறு, அரசாங்கம் எப்படியாவது நாட்டுக்கு எரிபொருளை கொண்டு வரவேண்டும் என்று பல முனைகளிலும் முயன்று வருகின்றது.

இதேவேளை, இம்மாதம் 20 ஆம் திகதிக்குப் பின்னரே நாட்டுக்கு எரிபொருளை கொண்டுவர முடியும் என அரச தரப்பால் தெரிவிக்கப்படுகின்ற போதிலும், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்டிருக்கும் முப்படையினரால் டோக்கன்களும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

இது ஒருபுறம் இருக்க, தற்போது எரிபொருள் இன்மையால் வீதிகள் வெறிச்சோடிக் கிடப்பதை காணக்கூடியதாக உள்ளது. அத்தோடு குறைந்த அளவிலான பொதுப்போக்குவரத்துகள் சேவைகளில் ஈடுபடுவதயும் அவதானிக்க முடிகின்றது.

எரிபொருள் இன்மையால் பொதுமக்களின் வாழ்வாதாரமும் வெகுவாக பாதிப்படைந்திருக்கிறது என்பது பொதுவாக சொல்லப்பட்டு வரும் நிலையில், திருட்டுச் சம்பவங்களும் சடுதியாக அதிகரித்துள்ளது.

எரிபொருள் திருட்டே இன்று முதல் நிலையைப் பெற்றிருக்கிறது. காரணம் , கறுப்புச் சந்தைகளில் எரிபொருட்களின் விலைகள் இரண்டு, மூன்று மடங்குகள் அதிகரித்து காணப்படுகின்றன. இன்னும் சிலர் வரிசைகளில் காத்திருந்து எரிபொருட்களை பெற்று அதனை வெளியே அதிக விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

இன்று எரிபொருள் திருடர்கள் ஒவ்வோர் இடங்களிலும் காணப்படுகிறார்கள். வீட்டில், வீதியோரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்கள், வாகனங்கள் என்பவற்றை இலக்கு வைத்து எரிபொருள் திருட்டு வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். கிராமப் புறங்களிலும், நகர் பகுதிகளிலும் திருடர்கள் விடயத்தில் நாம் எல்லோரும் அவதானமாகவே இருக்க வேண்டும்.

சாதாரண விலையை விடவும் கூடிய விலைக்கு விற்பனை செய்வதற்காக எரிபொருள் திருடும் கூட்டம் ஒருபுறம் இருக்க , போதைப் பாவனைக்கு அடிமையான இளைஞர்களும் இப்பொழுது எரிபொருள் திருட ஆரம்பித்துள்ளனர். இவர்கள் இரவிரவாக பெண்கள் தனிமையில் இருக்கும் வீடுகளை குறிவைத்து கையில் கிடைக்கும் பொருட்களை எடுத்துச் சென்று, குறைந்த விலைக்கு விற்பனை செய்கின்றனர்.

அண்மையில், கட்டுநாயக்க பகுதியில் ஏ.ரி.எம் இயத்திரத்தில் ஒருவர் பணத்தை பெற்றுக்கொண்டு வெளியே வந்த போது, அவருக்குப பின்பக்கமாக நின்ற நபர், பணத்தை பெற்றவரிடம் ஒருதொகை பணத்தைக் கேட்டு மிரட்டியிருக்கிறார். மர்ம நபர் கேட்ட பணத்தொகையை கொடுக்க முடியாது என பணத்தை எடுத்த நபர் தெரிவித்த போது, ஆத்திரமடைந்த மர்ம நபர் மறைத்து வைத்திருந்த கத்தியால் குத்தி, படுகொலை செய்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

எனவே, நமக்குப் பின்னால் நிற்பவர்கள் யார், எம்மை பின்தொடர்பவர்கள் யார், என்பது தொடர்பில் எந்தநேரமும் அவதானம் இருக்கவேண்டும். மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதையைப் போல, பொருளாதார ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு, இந்த திருட்டுக் கும்பல்களால் மேலும் அச்சத்தையும் கவனத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

‘உலத்தை நேசி; ஒருவரையும் நம்பாதே; உறங்கிய போதும் ஒரு கண்ணை மூடாதே’ என்ற பாடல் வரிகளின் அடிப்படையில் இந்த நாட்டை நேசிக்கும் ஒவ்வொருவரும் தங்களையும் தங்களது குடும்பத்தினரையும் சொத்துகளையும் பாதுகாப்பது தொடர்பில்தான் எந்த நேரமும் அவதானத்தை செலுத்த வேண்டும்.

இலங்கை மாணவர்களுக்கு சீனர்களால் அன்பளிப்பு செய்யப்பட்ட 1,000 மெட்ரிக் தொன் அரிசி கொண்ட 44 கொள்கலன்கள் கல்வி அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

G7 உச்சி மாநாட்டில், இலங்கையின் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்த 20 மில்லியன் டொலர் கூடுதல் உதவியாக வழங்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார். கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் தகவலின் படி, உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக சுமார் 30,000 விவசாயிகளுக்கு ஆதரவளிக்கவும் இந்த முயற்சி திட்டமிட்டுள்ளது எனவும் சொல்லப்படுகிறது.

இந்த நெருக்கடியிலிருந்து மீள குறைந்தது ஒன்றரை வருடங்கள் சரி செல்லும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

இந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் ரணில் பதவிக்கு வந்ததும் பாதுகாப்பார் என்று நம்பிய மக்கள், பிரதமர் மேல் இருந்த நம்பிக்கையை இப்போது இழந்து கொண்டு வருகின்றனர். “முடியாது” என்று சொல்வதற்கு ஒரு பிரதமர் தேவைதானா, அரசாங்கம் இருக்க வேண்டுமா என்றெல்லாம் விமர்சனங்கள் வந்துகொண்டே இருக்கின்றன.

“நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்தி எடுப்பதற்கு, எத்தனை வருடங்கள் போனாலும் பரவாயில்லை, ஆனால், குறைந்தது எரிபொருட்களையாவது பெற்றுத் தாருங்கள். அதன் மூலம் வேலைக்கு சென்று ஒரு வேளைக்காவது கஞ்சியை குடித்து உயிர் வாழ்கிறோம்” என்பதுதான் மக்களின் ஒரே கோரிக்கையாக இருக்கிறது.








# கல்விக்கு கை கொடுக்கும் ‘கை’

## அரச சேவைகள் தூங்கியபோது, விழித்துக்கொண்ட அல் ஹிக்மத்துள் உம்மா பவுண்டேஷன்



ஹஸ்பர் ஏ ஹலீம்
ahhasfar@gmail.com



நாட்டில் ஏற்பட்ட தற்போதைய பொருளாதார நெருக்கடியானது, எரிபொருள் பிரச்சினையிலும் பாரிய தாக்கம் செலுத்துகின்றது. இதனால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பாடசாலை மாணவர்களின் கல்வி நிலையும் பாதிப்படைந்துள்ளது.

இந்நிலைமைகளைக் கருத்திற் கொண்டு, மாணவர், ஆசிரியர்கள், அதிபர் ஆகியோரின் நலன் கருதி கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட தூர பாடசாலைகளுக்கிடையிலான விசேட பஸ் போக்குவரத்து சேவை 27.06.2022 அன்று காலையில் கிண்ணியா வலயக்கல்வி அலுவலகத்தில் இருந்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

எரிபொருள் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாகவே இச்சேவைகள் மேற்கொள்ளப் படுகின்றன. கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ. நசுகர் கான் தலைமையின் கீழ் ஆரம்பித்து வைக்கப்பட்ட இச்சேவைக்கு அல் ஹிக்மத்துள் உம்மா பவுண்டேஷன் பூரண அனுசரணையை வழங்குகின்றது.

முதலாவது பஸ் சேவையானது - கிண்ணியாவில் இருந்து நடுவூற்று ஊடாக வான்எல வரையிலும், இரண்டாவது பஸ் சேவை: கிண்ணியாவில் இருந்து முள்ளிப்பொத்தானை வரையிலும் நடைபெறும்.



முதலாவது பஸ் செல்லும் பாதை விவரம்: வலயக்கல்வி அலுவலகத்தில் இருந்து, கிண்ணியா சுற்றுவட்டம், குட்டிகராச்சி, முனைச்சேனை, கச்சகொடித்தீவு, மகமாறு, நடுவூற்று, சாந்திநகர், சூரங்கல், கற்குழி, மணியரசங்குளம், ஆயிலியடி, வான்எல வரையும் சென்று மீண்டும் கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்தில் வந்தடையும்.

இரண்டாவது பஸ் செல்லும் பாதை விவரம்: வலயக்கல்வி அலுவலகத்தில் இருந்து, கிண்ணியா சுற்றுவட்டம்,

குட்டிகராச்சி, முனைச்சேனை, கச்சகொடித்தீவு, சூரங்கள், தம்பலகமம், மீராநகர்(99), அரபா நகர்(98), சிராஜ்நகர்(97), புஹாரி நகர், முள்ளிப்பொத்தானை அங்கிருந்து மீண்டும் கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்தை வந்தடையும்.

கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ. நசுகர் கான் பஸ் சேவை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது கூறியதாவது: “கிண்ணியா வலயத்தில் மூன்று கோட்டங்கள் உள்ளன. கிண்ணியா, முள்ளிப்பொத்தானை, குறிஞ்சா கேணி ஆகிய இம்மூன்று கோட்டங்களில், முள்ளிப்பொத்தானை, குறிஞ்சாக்கேணி ஆகிய இரு கோட்டங்களுக்குமான பஸ் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது

“குறிஞ்சாக்கேணி கோட்டத்தில் சுமார் 6,000 மாணவர்கள் பயனடைவதுடன் 200க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பயனடைகிறார்கள். எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, இச் சேவையானது சுமார் ஆறு மாதங்களுக்கு மேற்கொள்ளப்படும். இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்ஸே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

“பஸ்சின் ஆசனங்களுக்கு ஏற்ப அல்-ஹிக்மா பவுண்டேஷனால் பணம் வழங்கப்படும். ஏனைய பணத்தை பயனாளிகளிடம் இருந்து பெற்றுக் கொள்வார்கள்” என்றார்.

இந்த சேவைக்கு பூரன அனுசரணையை வழங்கியுள்ள அல் ஹிக்மத்துள் உம்மா பவுண்டேஷனின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட இளைஞர் அமைப்பாளருமான கஸ்ஸாலி பாத்திஹ் கருத்து தெரிவிக்கும் போது கூறியதாவது: “எரிபொருள் இல்லாமையை கருத்தில்கொண்டு, மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் நலன் கருதி இச்சேவை செய்யப்படுகின்றது. தற்போதைய எரிபொருள் நெருக்கடி நிலைமையால் மாணவர்கள் ஆசிரியர்கள் என பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். இதனை கருத்திற் கொண்டு இச் சேவை ஆறு மாதங்களுக்கு தொடரும்” என்றார்.

இவ்வாறான பஸ் சேவை வரவேற்கத்தக்கது. ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள் எனப் பலர் இச்சேவையைப் பாராட்டினாலும் அரசாங்கத் தரப்பு கண்டு கொள்ளவில்லை. தொடர்ச்சியாக பாடசாலை கிழக்கு மாகாணத்தில் நடைபெற வேண்டும் என்ற கோரிக்கையும் வெளிப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளது. ஆனால், நகர்புற பாடசாலைகள் எரிபொருள் பிரச்சினையால் மூடப்பட்டுள்ளமை, தொடர்பில் கல்வி அமைச்சு ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் கிராம மட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு பல கிலோ மீற்றர் ஆசிரியர்கள் அதிபர்கள் சென்று கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட வேண்டியுள்ளது.

எரிபொருளின்மை என்பதால் திடீர் என்று செல்ல முடியாது. இதனை கருத்திற் கொண்டு இலவச பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டாலும் கிண்ணியா வலயப் பாடசாலைகள் அனைத்துக்கும் தூர பகுதிக்கு உரிய நேரத்துக்கு செல்ல முடியாது. சில பகுதிகளில், பஸ் சேவை இன்மையால் ஆசிரியர்கள் போக்குவரத்தில் பாரிய சிக்கல்களை சந்திக்கின்றனர். அவர்களுக்கும் இச் சேவையை உரிய தரப்பினர் வழங்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றனர்.

அரசாங்கம் செய்ய வேண்டியதை, தனியார் நிறுவனம் செய்திருப்பது வரவேற்கத்தக்கது. எது எவ்வாறாக இருப்பினும் ஆசிரியர்கள், அதிபர்களுக்கான முன்னுரிமை அடிப்படையில் அத்தியாவசிய சேவை என்ற நிலைக்குள்ளாவது எரிபொருளை வழங்க வேண்டும். இல்லாது போனால், மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படையும்.



எரிபொருளை கோரி கிண்ணியா வலய ஆசிரியர்கள், கிண்ணியா ஐஓசி எரிபொருள் நிரப்பு நிலையம் வரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். இவர்களது கோரிக்கை நியாயமானது. ஏனெனில் உரிய நேரத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட பெற்றோலின்மை பாரிய குறைபாடாக உள்ளது. அவர்களின் கோரிக்கை அடங்கிய மகஜர் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி, கிண்ணியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமிந்த பெர்ணாண்டோவிடம் கையளிக்கப்பட்டன.

ஆசிரியர்களுக்கான எரிபொருள் தீர்வினை விரைவில் பெற்றுக் கொடுக்க வேண்டும். இல்லாது போனால் நாளைய தலைவர்களாக வரவிருக்கின்ற மாணவச் செல்வங்களின் கல்வி நிலைமை மோசமாகப் பாதிக்கப்படும் .

அரசாங்கதுறை நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் வீழ்ச்சி கண்டுள்ளது. இனி இது போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் தான், இலவச போக்குவரத்து சேவைக்கு கைகொடுக்க வேண்டும். ஒட்டு மொத்தமாக, மாணவச் சமூகத்தின் நலன் கருதி, எரிபொருளை ஆசிரிய சமூகத்துக்கு பெற்றுக்கொடுத்து, கல்வித் துறையை முன்னேற்றமடையச் செய்ய வேண்டும். இதற்காக உரிய அரச தரப்பு நடவடிக்கைகளை சாதகமாக்க வேண்டும்.

# வீழுமா ராஜபக்ஷ இராஜ்ஜியம்?



இருளப்பன் ஜெகநாதன்
jegannathan8@gmail.com

கொடுத்தவனே பறித்துக்கொண்டாண்டீ, வளர்த்தவனே வெறுத்துவிட்டான் டீ' எனும் பட்டுக்கோட்டை கலயாணசுந்தரத்தின் பாடல் வரிகள் தற்போது மஹிந்தவின் நிலை சொல்லும் வரிகள்!

ஏனெனில் சொந்த மக்களால் இன்று தூற்றப்பட்டு பதவி துறந்து பதுங்கினார் மஹிந்த!

1968 மே மாதம் பெலியத்தை தொகுதியில் ஸ்ரீ. ல. சுதந்திர கட்சியின் அமைப்பாளராக உதயமான மஹிந்திரா பெர்சி ராஜபக்ஷவின் அரசியல் அத்தியாயம் 2022 அதே மே மாதத்தில் அஸ்தமனமானது.

பிரதமர் பதவியில் மே 9 ஆம் திகதி விலகிய மஹிந்த ராஜபக்ஷ, அலரி மாளிகையிலிருந்து இரகசியமாக வெளியேறியதாகவும், விமானப் படையின் ஹெலிகாப்டர் மூலம் திருகோணமலை கடற்படை முகாமில் தஞ்சமடைந்ததாகவும் தகவல்கள் சமூகவலைத்தளங்களில் பகிரப்பட்டன.

52 ஆண்டு அரசியல் அனுபவம் கொண்ட மூன்று தசாப்த கால யுத்தத்தின் வெற்றி நாயகனின் அரசியல் பயணம் கண்ட அஸ்தமனம், இந்த நூற்றாண்டில் பதிவு செய்யப்படவேண்டிய ஆச்சரியங்களில் ஒன்று!

சிங்கள மக்களின் மனம் வென்றவன், பேரினத்தின் மாற்றமுடியா மாண்புக்குரியவன், மகாவம்ச காவியத்தலைவன், தென்னிலங்கை ருஹுனு வம்சம், துட்டகைமுனுவின் அம்சம், பௌத்தவாதம் -மற்றும் இனவாதம் போன்ற பிரம்மாஸ்திரத்தை, எங்கே எப்படி யாரை கொண்டு பிரயோகிக்க வேண்டும் என்பதறிந்த துரோணர்.எதிர்க்கட்சியை வளர்ப்பதிலும், சிதைப்பதிலும் சாணக்கியன். சிறுபான்மை காட்சிகளை விலை பேசவும், அவற்றை எங்கே அணைப்பது எப்போது, அடிப்பது என்ற வித்தை தெரிந்த வித்தகன்.

2009 இல் விடுதலைப் புலிகளை அழித்த பின் தென்னிலங்கையின் நிரந்தர காவல் தெய்வம் என போற்றப்பட்டுவரும் ராஜபக்ஷவின் ராஜ்ஜியம் பின்னாளில் சில சரிவுகளை சந்தித்திருந்தாலும் மீண்டும் சிங்களம் மற்றும் பௌத்தவாதம் போன்ற ஏணிப்படிகள் மூலம் அரியாசனம் ஏறி, தனது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷவை அதிபராக்கி சாம்ராஜ்யம் நடத்தும் சக்கரவர்த்தி!

ராஜபக்ஷ, புயல்கள் பல கண்ட ஆலமரம்; இந்த மக்கள் எழுச்சி எனும் புளுக்களுக்கா அச்சம் கொள்ள போகிறது என தென்னிலங்கையின் இன்னும் கூட ஓயவில்லை ராஜபக்ஷ 'க்ளோபியா' எனும் வியாதி.

மஹிந்த எனும் ஆலமரம் விதைத்த விதையின் வீரியம்! பற்றி குறை மதிப்பீடு செய்யவும் முடியாது என்பதை ராஜபக்ஷவின் கடந்த கால அரசியல் நகர்வுகளை மீட்டிப் பார்த்தால் உணரமுடியும்.

### மஹிந்தவும் மறக்க முடியா மே மாதமும்

வீரகட்டிய கிராமத்தில் அமைந்திருந்த ராஜபக்ஷ நினைவு தூபி பெற்றோரது சமாதி, அவர்களது தந்தை டான் ஆல்வின் ராஜபக்ஷவின் சிலையும் போராட்டக்காரர்களால் சேதத்துக்கு உள்ளாக்கப்பட்டு அகற்றப்பட்டதும் 2022 ஆண்டு மே 9 ஆம் திகதியே!

ஹம்பாந்தோட்டையில் வீரகட்டிய கிராமத்தில் அரசு அருங்காட்சியகமாக செயல்பட்டு வந்த ராஜபக்ஷ குடும்பத்தின் பூர்வீக வீடு மே 9 இல் தீக்கிரையாக்கப்பட்டது. மே 9 குருணாகல் நகரில் உள்ள, மஹிந்த ராஜபக்ஷவுக்கு சொந்தமான வீடும் தீக்கிரையானது.

மே 9 பொலன்னறுவை தேர்தல் மாவட்டத்தை மஹிந்த ராஜபக்ஷவின் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான அமரகீர்த்தி அத்துகோரல, நிட்டம்புவ பகுதியில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

மே 9 அன்று, கொழும்பில் காலி முகத்திடலில் போராட்டக்காரர்கள் மீதான ராஜபக்ஷ ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் விளைவாகவே இந்த வன்முறைகள் இடம்பெற்றன. 13 வருடங்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை வீழ்த்தியதால் வெற்றி நாயகனாய் போற்றப்பட்டு அரசியல் செல்வாக்கின் உச்சம் பெற்ற அதே மே மாதத்தில் தற்போது தீவிரமடைந்த மக்கள் போராட்டத்தால் நிலைகுலைந்தது மஹிந்தவின் புகழ். ராஜபக்ஷ அரசியல் வரலாற்றில் கண்டிராத மாபெரும் எதிர்ப்பலை இம்முறை மேலோங்கியுள்ளது.

### சரித்திரம், கண்டிராத தரித்திரம் கண்ட இலங்கை

அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் இறக்குமதி ஒன்றில் மட்டுமே தங்கி இருப்பதால் அவற்றின் தட்டுப்பாடு தவிர்க்க முடியா தலையிடியாகியுள்ளது. மருந்துகள், பால்மா, சீனி, முட்டை, பெட்ரோல், டீசல், எரிவாயு என அத்தியவசிய பொருட்கள் அனைத்தின் விலையும் சடுதியாக உயர்ந்திருக்கின்றன.

டீசலில் இயங்குகின்ற நாட்டின் முக்கியமான மின் உற்பத்தி நிலையங்களின் உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளது. அதன் விளைவாக நீண்ட மின்வெட்டுக்கு மக்கள் முகம் கொடுக்கின்ற நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

சடுதியான விலை உயர்வு உரமற்று சிதைந்த விவசாயம்! அன்றாட வாழ்வுக்கும் திண்டாடும் மக்கள் என, நாளை பற்றிய நம்பிக்கை இழந்த மக்கள் பசியில் பரலோகம் போவதை விட பரதேசியாய் போகலாம் என பல தேசங்களுக்கு தஞ்சமடைய வைத்துள்ளது.

இலங்கை சுதந்திரம் பெற்றது தொடக்கம் சரித்திரம், கண்டிராத தரித்திரத்துக்கு நம் தேசம் முகம் கொடுத்து வருகிறது.

இதற்கெல்லாம் காரணம் ராஜபக்ஷ குடும்பமே என்றும் ராஜபக்ஷர்கள் பதவி துறக்க வேண்டும்; கைது செய்ய வேண்டும்; சொத்துகள் பறிமுதல் செய்ய வேண்டும் என்றெல்லாம் நாடு முழுவதும் போராட்டங்கள் நடந்து வருகின்றன.

மக்களை வீதிக்கு தள்ளிய பொருளாதார வீழ்ச்சி எனும் தீ வரலாற்றில் முதல் தடைவையாக இன மொழி கடந்த சமத்துவம் மிக்க ஜனநாயக போராட்ட எழுச்சியை உருவாகியுள்ளது. இவ்வெழுச்சி மஹிந்த ராஜபக்ஷ எனும் முதிர்ந்த அரசியல் யானையை 2022 மே 9 இல் கட்டாயத்தின் பேரில் பதவி துறந்து பதுங்க வைத்தது. இது பதுங்கிய யானையா! பதுங்கிய வேங்கையா என்பதை காலம் தான் உணர்த்திடல் வேண்டும்.

ஏனெனில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ என ராஜபக்ஷ அலை, இலங்கை அரசியல் கடலில் இன்னும் அடித்துக்கொண்டுதான் இருக்கிறது.

"அரசியல் தலைவர்கள் தகுந்த நேரத்தில் பதவி துறக்கவும் பக்குவப்படவும் வேண்டும். மித மிஞ்சிய பதவி மோகம் அவமானத்தில் முடியும்" என தன் தம்பி நிலை குறித்து கவலை வெளியிட்டார் சமல் ராஜபக்ஷ.

அனைத்து அரசியல்வாதிகளையும் புறக்கணிக்கும் மனநிலையில் மக்கள் உள்ளமையை போராட்ட கள நிலைவரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கொழும்பில் முதன்முதலில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் பௌத்த பிக்குமார் கூட கலந்துகொண்டமை ஒரு வரலாற்று நிகழ்வு. இனவாதத்தைத் தூண்டி எம்மை பிரிதாண்டார்கள். இனி அதற்கு இடம் தர முடியாது. மதச்சார்பின்மை அரசியலமைப்பு வேண்டும் போன்ற கருத்தியல்கள் உருவாக தொடங்கியுள்ளன. இவை அனைத்தும் ராஜபக்ஷ ராஜ்ஜியம் வீழ்ச்சி கண்டு வருவது போல் ஒரு தோற்றப்பாட்டை உருவாக்கியிருக்கிறது.

### மஹிந்தவும் அரசியலும்

ராஜபக்ஷ ராஜ்யத்தின் வீழ்ச்சி பற்றிய பார்வையை செலுத்தும் போது அவர் கடந்து வந்த அரசியல் பயணத்தையும் அவர் கொண்ட ஆளுமைகளையும் சற்று உற்று நோக்க வேண்டும்.

### 52 ஆண்டுகால அரசியல் பயணம்

மூன்று தலைமுறை கண்ட அரசியல் தலைவர்.

24ஆம் வயதில் முதல் நாடாளுமன்ற அங்கம்.


இரு முறை ஜனாதிபதி பதவி வகிப்பு.

இலங்கை அரசியல் களத்தில் ஆழமான அரசியல் தடத்தை உருவாக்கியவர். நிதி அமைச்சர், பிரதமர் என்று பல உயர் பதவிகள் வகித்தவர்.

இலங்கை சுனாமியால் பாதிப்படைந்த போது தான் நாட்டின் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்று சில மாதங்களில் இடம்பெற்ற சுனாமி தாக்கத்தால் உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்தவர்.

மூன்று தசாப்தங்களாக நிலவிய தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான உள்நாட்டுப் போரினை வென்றதும், புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கொன்றதும் ,மஹிந்த கூட எதிர்பார்த்திராத செல்வாக்கினை உச்சம் பெற்றார். அந்த உச்சத்தால் தென்னிலங்கை மக்களின் மாண்புமிகு மன்னரானார் மஹிந்த. குடும்ப ஆட்சி சர்வாதிகாரம், ஊழல், இனவாதம் போன்றவற்றால் இன்று இந்த மன்னர் மண்ணை கவ்வினார் என்று பலர் சொல்கின்றனர் .

ஆனாலும், பேரினவாதிகளின் துட்டகெமுனு மன்னனென போற்றப்படும் மஹிந்த சாம்ராஜ்யம், இன்றைய அரசியல் சூழ்நிலையால் அவ்வளவு எளிதில் வீழ்ச்சி பெறுவது வியப்பானது. அந்த வியப்புக்கு விடை தேடவே இக்கட்டுரை முயல்கின்றது.







விரக்திக்கும் வெறுப்புக்கும் மத்தியில்

# சமாதானத்தைத் தேடுதல்



ஏ.எச்.ஏ ஹுஸைன்
husseinmedia000@gmail.com

சமாதானம் என்பது உண்மை, நீதி, நேர்மை, சமத்துவம், அன்பு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

சமாதானமும் நிம்மதியும் நிறைந்த வாழ்வு என்பது, அனைவரும் விரும்பும் ஓர் அலாதிப்பிரியமான வாழ்வியலின் அடிப்படை அம்சம். அத்தோடு அது, ஒவ்வொரு மனிதனின் வாழ்வியல் உரிமையாகவும் இருக்கிறது.

நிம்மதி, சமாதானம் என்பது அரசனுக்கும் தேவை; ஆண்டிக்கும் தேவை; நீதிபதிக்கும் தேவை; வாதிக்கும் தேவை; பிரதிவாதிக்கும் தேவை; தவளும் குழந்தைக்கும் தேவை; தள்ளாடும் வயோபருக்கும் தேவை. ஒட்டு மொத்தத்தில் இந்தப் பிரபஞ்சத்துக்கே நிம்மதி தேவை. அதனால்தான் ஒவ்வொரு மனிதரும் சமாதானத்தை ஆசிக்கின்றனர்.

ஆனால், நம்மில் அனைவரும் அடுத்தவருக்கு அந்தச் சமாதானத்தை வழங்குவதில் ஆர்வம் கொண்டுள்ளோமா என்பது ஆச்சரியமான விடையை அளிக்கும் கேள்விதான்.

ஒருவரது தனிப்பட்ட வாழ்விலும், அவரது சமூக வாழ்விலும் சமாதானமும் நிம்மதியும் நிலவவில்லையாயின் அங்கு துயரமும் சோர்வும் அவநம்பிக்கையும் ஏக்கப் பெருமூச்சும் இறுதியில் விரக்தியும் அழிவும்தான் மிஞ்சி நிற்கும்.

ஆகையால், சாந்தியும் சமாதானமும் நிம்மதியும் ஒருவரது தனிப்பட்ட வாழ்விலிருந்தே ஆரம்பித்து, அது சுழல் வடிவில் (நுளம்புச் சுருள்போல விரிவடைந்து) வியாபிக்க வேண்டும்.

தனிப்பட்ட நபருக்குள் உள்ளார்ந்த நிலையில் வளரும் சமாதானமே, அது அவருக்குள் தொடங்கி, குடும்பம், அயலவர்கள், சமூகம், பிரதேசம், நாடு என்று வளர்ந்து ஈற்றில் உலகளவில் விரிவடைய வேண்டும் என்றே சமாதான ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

ஆனால், உள்ளார்ந்த சமாதானத்தை அடைவதற்கு பல சந்தர்ப்ப சூழ்நிலைகள் வெளிப்புறச் சவால்களாக அமைந்து விடுகின்றன. இலங்கையிலும் இவ்வாறுதான் சமாதானத்தைத் தேடுதல் என்பது, ஆச்சரியமானதாகவும் அபூர்வமானதாகவும் காணும் ஒரு விடயமாக மாறிவிட்டுள்ளது.

இலங்கையில் சுதந்திரத்துக்குப் பின்னர் இடம்பெற்ற இனவாத, மதவாத, மொழிவாதக் கோளாறுகளும், கடந்த 30 வருட காலமாக மூர்க்கத்தனமாக இடம்பெற்ற ஆயுத முரண்பாடுகளுமே சமாதானத்தைச் சீர்குலைக்கும் வெளிப்புறச் சூழ்நிலைகளாக அமைந்து விட்டன.

1948 சுதந்திரம், சிங்களம் மட்டும் பிரகடனம், ஜே.வி.பி கிளர்ச்சி, 1983 கறுப்பு ஜூலை, 1985 கிழக்கில் இனக் கலவரம், 1987 இந்தியப் படையினரின் நடவடிக்கைகள், 1990 வடக்கு- கிழக்கில் இனப்படுகொலை, முஸ்லிம்கள் வடக்கிலிருந்து விரட்டியடிப்பு, 2004இல் சுனாமி, 2009 இறுதி யுத்தம், 2010-2018 வரை முஸ்லிம் விரோதப் போக்குகள், 2019 தேவாலய குண்டுவெடிப்பு, 2020 கொரோனா வைரஸ் தொற்று, 2022 பொருளாதார நெருக்கடி என தொடராக இடம்பெற்று வந்துள்ள நிகழ்வுகள், இலங்கையரை வெறுப்பும் விரோதமும் விரக்தியும் நிறைந்த சூழ்நிலைக்குள் தள்ளி விட்டுள்ளன.

சுதந்திரத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் இருந்து இப்பொழுது வரை, வன்முறைகளால் அழிவுகளையும் ஆபத்துகளையும் அவநம்பிக்கைகளையும் எதிர்கொண்டு அனுபவப்பட்ட நமக்கு முன்னால் பல கேள்விகள் உள்ளன.

இன மத மொழி வேறுபாடுகளின்றி, நாம் அனைவரும் இலங்கையர்தான் என்று கொண்டால், இலங்கை ஒரு சமாதான நாடாகத் தோன்றுகின்றதா?

ஒவ்வொருவரும் தமக்குள்ளே சமாதானமாக இருக்கின்றோமா? அடுத்த சமூகங்கள் அமைதியுடன் வாழ நாம் ஏதாவது செய்திருக்கின்றோமா?

சமாதானமாக இருக்கும் உணர்ச்சியை எவ்வாறு உணர்ந்து கொள்வது?

எந்தத் தருணத்தில் சமாதானமாக இருப்பதாகவும் எந்தத் தருணத்தில் சமாதானமாக இல்லை என்றும் உணர்கின்றோம்?

எத்தகைய எண்ணங்கள் அல்லது நடவடிக்கைகள் எங்களைச் சமாதானமாக வைத்திருப்பதற்கு உதவி புரிகின்றன? என்ற கேள்விகளை எழுப்பி குறைந்தபட்ச சமாதானத்தையாவது நிலைநாட்டுவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

வேறுபாடுகள், பிரிவுகள் என்பது இயற்கையானது. எமக்கிடையேயான வேறுபாடுகள் யாவை? பால் நிலை, நிறம், வயது, இரசனை, மொழி, பிரிவுகள் என்பவை அவற்றிலடங்கும்.

தமிழர்களாயினும் முஸ்லிம்களாயினும் சிங்களவர்களாயினும் எல்லாச் சமூகங்களும் இழந்தவை ஏராளம். சமாதானத்தை குறைந்தபட்சம் செலவில்லாமல் ஒரு புன்சிரிப்புடன் ஆரம்பிக்கலாம். இந்த உள்ளார்ந்த புன் சிரிப்புக்கு மொழி, மதம், பிரதேசம், இனம், பால் வேறுபாடு, அதிகார அந்தஸ்து, தொழில் நிபுணத்துவம் என்பவை ஒருபோதும் ஒரு தடையாக இருக்கப் போவதில்லை.

சமாதானத்தை வன்முறை மூலம் ஒருபோதும் அடைய முடியாது. வன்முறையைப் பாவிப்பதற்குப் பதிலாக மென்முறையை அல்லது நன்முறையைப் பாவித்தே சமாதானத்தை அடைந்து கொள்ள முடியும் எனக் கூறிய சான்றோர்கள், அதனைச் செயற்படுத்திக் காட்டி விட்டும் சென்றிருக்கின்றார்கள். சமாதானம் புரிந்துணர்வு எனும் விதையிலிருந்து விருட்சமாக வளரலாம்.

'கண்ணுக்குக் கண்' எனும் பழிவாங்கல் முறை இந்த உலகை குருடாக்கவே உதவும் என்கிறார்கள் சமாதான செயற்பாட்டாளர்கள். மேலும், மற்றவர்களுடன் போர் புரிபவர்கள், தங்களுக்குள்ளும் போர் புரிந்து கொள்கின்றார்கள் என்ற மர்மத்தை விளங்கிக் கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் இடித்துரைக்கின்றனர்.

அதேவேளை, அன்பும் இரக்கமும் அத்தியாவசியமானவை. அவை மறைத்து வைக்க வேண்டிய மர்மப் பொருள்களல்ல. அன்பும் இரக்கமும் இன்றி இவ்வுலகில் மனிதரும் ஏனைய ஜீவராசிகளும் கொடி செடி மரங்களும் உயிர்வாழ முடியாது.

இயற்கையிலே இளவேனிற்காலம், வசந்த காலம், கார்காலம் என்று இவ்வாறு சுழன்று கொண்டிருக்க மரம் செடி கொடிகளெல்லாம் இன பேதங்களுக்கு அப்பால் இயற்கையின் விநோதங்களை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இதிலே மனிதர்கள் கண்குளிர்ச்சி அடைகின்றார்கள்.

மரம் செடி கொடிகள், மனிதர்கள் காட்டும் எந்தவிதமான வேறுபாடுகளுக்கும் அப்பால் இயற்கை நியதியின் கீழ் இயல்பாக வளர்கின்றன. பாகுபாடு காட்டும் மனித குலம் கற்றுக்கொள்ள வேண்டிய சிறந்த பாடம் இயற்கையிடம் நிறைய இருக்கின்றது.

தமிழ், முஸ்லிம், சிங்களவர்களின் நிலங்களில் எங்கு வளர்ந்தாலும் மரம் செடி கொடிகள் அதன் இயற்கைப் பண்புகளோடு எழிலாய் வளர்ந்து பூத்து காய்த்து குலுங்கி கலகலப்பாய் இருக்கின்றன. நாமும் மற்றவர்களும் மகிழ்ச்சியாக இருக்க விரும்பினால் முதலில் நாம் அன்பையும் இரக்கத்தையும் அரவணைத்துக் கொள்ள வேண்டும்.

ஒருவர் முதலில் தன்னை நேசித்தால், அதன் பின்னர் தன்னைச் சுற்றியிருப்பவர்களையும் நேசிக்க ஆரம்பித்து விடுவார். அடுத்தடுத்த நிகழ்வாக அயலவர் மீது அன்பு ஏற்படும். சகிப்புத் தன்மை என்பது சமாதானத்தை இயலுமானதாக்கக் கூடிய ஒரு நற்பண்பாகும்.

சமாதானம் என்பதை அடைந்து கொள்ளத் துடிக்கும் ஒரு இலக்காக கொண்டிருந்தால் சகிப்புத்தன்மை என்பது அதன் வழிமுறையாகும்.

எங்களது குடும்பம், நண்பர்கள், சமூகத்தாருடன் ஒற்றுமையாக இருப்பதற்கும் நாம் எமது வேற்றுமைகளைப் புரிந்து கொள்வதற்கும் அவற்றிலிருந்து கற்றுக் கொள்வதற்கும் சகிப்புத்தன்மை கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

நாம் எல்லோரும் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற வகையில், ஒன்றுபட்டுச் செயற்படவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. இந்த விடயத்தில், எமது கசப்பான கடந்தகால நிகழ்வுகளின் அனுபவங்கள் எந்த சமுதாயத்தையும் குறிவைத்துக் குற்றம் சுமத்துவதாக அமைந்து விடக்கூடாது.

அடுத்த சமூகத்தாரோடு அந்யோன்யமாக வாழ்ந்தவர்கள் தமது பூர்வீகப் பூமிகளிலிருந்து விரட்டப்பட்டு, அவர்களது சிறார்கள் அகதிகளாகப் பிறந்து, அகதி முகாம்களிலேயே வளர்ந்து, அங்கேயே திருமணம் முடித்து அகதி முகாம்களிலேயே குடித்தனம் நடத்தும் துர்ப்பாக்கிய நிலை இலங்கை சமூகங்களுக்கு ஏற்பட்டு, இப்பொழுது கால் நூற்றாண்டைக் கடந்துகொண்டிருக்கின்றோம்.

எனவே, இப்பொழுது கிடைத்துள்ள அரிய வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்தி, நாட்டிலுள்ள அனைத்து சமூகங்களும் நன்மை பெறக்கூடியதாக வழிவகை செய்யப்பட வேண்டும். தேசத்தையும் மக்களையும் எழுச்சி மிக்க ஒரு வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்வது இன்றியமையாதது. அதற்காக, இலங்கையில் எல்லோரும் சமாதானத்தைத் தேடுவோம்.



ராஜவந்தான் மலையும் பௌத்த விகாரையும்:


# மலையில் நடப்பது என்ன?






அ. அச்சுதன்

வடக்கு – கிழக்கில் தமிழர்களின் தொன்மை மிகு பல இடங்களை ஆக்கிரமிப்பு செய்யும் முயற்சிகள், தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. திருகோணமலை மாவட்டத்தில், நீண்ட வரலாற்று முக்கியத்துவம் மிக்க பல இடங்கள், மூதூர் பிரதேசத்தில் காணப்படுகின்றன.







மூதூர் 64ஆம் கட்டை ராஜவந்தான் மலையில் இருந்த கல்வெட்டுகள், சிவவழிபாட்டு அடையாளங்கள் அழிக்கப்பட்டு விட்டன. இன்று, இந்த மலையில் பௌத்த விகாரை கட்டப்படுகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியிலும், வல்லாதிக்க பௌத்த மேலாண்மையை கைவிடாத மோசமான நிலை இத் தீவில் காணப்படுகின்றது. சிங்கள மக்களே வாழ்ந்திராத இந்த இடத்தில், பௌத்த விகாரை எதற்கு? இந்த மலையில் பௌத்த விகாரை அமைப்பதற்கு அனுமதி கொடுத்தது யார்? தமிழர் பகுதிகளில் உள்ள குன்றுகள் எல்லாம் பௌத்த அடையாளமாக ஆக்கிரமிக்கும் முயற்சிகள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன.

மூதூர் 64ஆம் கட்டை ராஜவந்தான் மலையில் அமைக்கப்படும் விகாரை விடயமாகவும் இப்பிரதேசத்தின் வரலாற்றையும் இன்றைய நிலை பற்றியும் மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கத்தின் தலைவர் சிவஸ்ரீ இ பாஸ்கரன் குருக்கள் கருத்து தெரிவிக்கையில் பின்வருமாறு கூறியிருந்தார்.

“மூதூர் 64 ஆம் கட்டை ராஜவந்தான் மலை, எமது சைவத் தமிழரின் பலநூறு ஆண்டுகள் வரலாறு படைத்த, ஆதி சைவ தமிழர் இந்த மலையின் மேல் பழைமை வாய்ந்த வழிபாட்டு அடையாளங்கள் சிவலிங்கம், முருகன் வேல் வழிபாடு, அம்மன் வழிபாடு அத்துடன் பூதவழிபாடுகள் செய்து வந்தனர். இதனை வழிபாடு செய்து வந்த பாமர மக்கள், வெட்டுகாட்டு சேனை (சகாயபுரம்) என்ற கிராமத்தில் இன்னும் வாழ்ந்து வருகின்றனர். இந்தப் பாமர மக்கள் இந்த மலையில் கல் உடைப்பதையே, தங்களது வாழ்வாதார தொழிலாக செய்து வந்தனர் .

“இந்த மலை, மூதூர் 64ஆம் கட்டை முதல் தொடராக, கயமொந்தான் மலை, பாண்டியன் மலை என தொடராக ஏழு மலைகள் இலக்கந்தை மலை வரை காணப்படுகின்றது. இங்கு, ஆதிகால மக்கள் வழிபட்டதற்கான அடையாளங்களாக, சைவ சமய பழைமையான வழிபாட்டு சின்னங்கள் இருந்து வருகின்றது.

“இந்த நிலையில், 64 ஆம் கட்டை ராஜவந்தான் மலைமேல் செல்லும் வழியில், தமிழ் பிராமிய எழுத்துகள் உள்ள கல்வெட்டும் மேலே செல்கையில், ஒரு குகையில் தமிழ் பிராமிய எழுத்துகளும் உள்ளன. இந்தக் கல்வெட்டுகள், 2018ஆம் ஆண்டளவில் பௌத்த விகாரை அமைத்துக் கொண்டிருக்கும் பௌத்த மதகுரு, இராணுவம் ஆகியோரால் அகற்றப்பட்டுள்ளன.

“குகைக்கு முன்னால் இருந்த கல்வெட்டுகள் கூட அழிக்கப்பட்டுள்ளன. இந்த சைவத் தமிழர் வரலாற்றை, 1979ஆம் ஆண்டு காலப்பகுதியில், மலைமேல் ஆய்வு செய்து, மலையில் இருந்த வழிபாட்டு அடையாளத்தை உறுதிபடுத்திய தொல்லியல் ஆய்வாளரும் பேராசிரியருமான கலாநிதி இந்திரபால, அப்போது இருந்த அரசுக்கு உறுதிபடுத்தியுள்ளார், இதன் போது அவருடன் கூட இருந்து ஆய்வில் ஈடுபட்ட பேராசிரியர் பால சுகுமாருக்கும் இவ்விடயம் தெரியும்.

“இத்தனைக்கும், ராஜவந்தான் என்ற சிற்றரசன் சகிதம் இருந்தோர், வர்த்தக வணிக அடிப்படையில் இந்த மலைமேல் இருந்ததற்கான ஆதாரங்கள், இங்கு இருந்த பிராமி எழுத்து கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது. அத்துடன், முருகவேல் வழிபாடு, அம்மன் வழிபாடு, லிங்க வழிபாடு, பூத வழிபாடு செய்து வந்த வேலன் சித்தன், நமலி என்பவர்கள் வராலாறுகளும் உள்ளன.

“தொடர்ந்து, தீசன் என்பவன் இந்த மலையின் மேல் வழிபாடு செய்து வந்தான். அதன் வழிவந்த குடி மக்கள் இன்றும் இந்த மலையின் கீழ் உள்ள வெட்டுகாட்டு சேனை (சகாயபுரம்) கிராமத்தில் உள்ள மாணிக்கவிநாயகர் கோவிலைச் சூழ வாழ்ந்து வருகின்னர். இந்தப் பாமர மக்கள் படிப்பு இல்லாமையால் தங்கள் வரலாறு தெரியாதவர்களாய் உள்ளனர். இதனால் தமது காணிகளையும் இழத்துள்ளனர்.

“திருகோணமலை-மட்டக்களப்பு வீதியில் 64 ஆம் கட்டை மலையின் கீழ் வீதியோரத்தில் உள்ள சுமார் 200 வருடங்கள் பழைமை வாய்ந்த மலையடி பிள்ளையார் கோவிலைக் கட்டுவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இத்தனைக்கும் அரச தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் நேர்மையோடும் இதய சுத்தியோடும் பக்கசார்பின்றி ஆய்வு செய்வார்களாயின் உண்மைகள் வெளிப்படும்.

“இந்த மலை பிரதேசம், அரசாங்கத்தின் அனுமதியோடு பௌத்த மதத்துக்கு ‘பூஜா பூமி’ என கையளிக்கபட்டு உள்ளதாக அரச அதிகாரிகளும் பௌத்த மதகுருவும் கூறுகின்றனர். இந்த மலையைச் சூழ உள்ள பிரதேசத்தில் ஒரு பௌத்த சிங்களவர்களும் வாழ்ந்திராத இடத்தில், தமிழ் பேசும் மக்களின் காணிகளையும் வணக்க தலங்களையும் பரம்பரையாக வாழ்ந்து வருகின்ற மக்களையும் மதகுருமாரையும் மிரட்டி, கையகப்படுத்தி பௌத்த விகாரை அமைப்பது பிழையான செயல். இவர்களின் செயற்பாட்டால், இந்த நாட்டில் எப்படி சாந்தியும் சமாதானமும் ஏற்படமுடியும்? எனவே, இந்த ஆக்கிரமிப்பு நிறுத்தப்பட வேண்டும்” என்றார்.

இந்த நிலையில், மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கத்தினர், ராஜவந்தான் மலையில் சைவக் கோவிலை அமைப்பதற்கு கடும் முயற்சி எடுத்து வருகின்றனர். ஆனால், கோவில் அமைப்பதற்கான அனுமதி இன்னும் வழக்கப்படவில்லை. பௌத்த விகாரை கட்டுவதற்கு மட்டும் அனுமதி தேவையில்லை. ஆனால், சைவக் கோவிலை அமைப்பதற்கு மட்டும் பல அனுமதிகள் தேவை. இதுதான் இந்த நாட்டின் சட்டமா என, தமிழ் மக்கள் கோள்வி எழுப்புகின்றனர்.

ராஜவந்தான் மலையில் என்ன நடக்கின்றது என்பது, தமிழ் அரசியல் வாதிகளுக்கு தெரியுமா? இனியாவது இவ் விடயத்தில் கவனம் எடுப்பார்களா?





மருவி வரும் கலைகள் மறைந்து விடாமல்

# புத்துயிரளிக்கும் களுதாவளை



வ. சக்திவேல்

shagthivel@gmail.com

தற்கால நவநாகரிக யுகத்தில் சினிமா, தொலைக்காட்சி, சமூக ஊடகங்கள் எனப் பலதரப்பட்ட விடயங்கள் பல்கிப் பெருகி வருகின்ற நிலையில், தமிழர்கள் மத்தியில் அடிப்படையிலிருந்து வந்த பாரம்பரியக் கலைகள், மெல்ல மெல்ல மருவிக் கொண்டு வருவதாக கலைஞர்களும் கலை ஆர்வலர்களும் கருதுகின்றனர்.





எனினும், நவீன யுகத்தில் எவ்வாறுதன் எல்லையில்லா தொழில்நுட்பங்களும் பொழுதுபோக்கு அம்சங்களும் அமைந்திருந்தாலும், தமது ஆதிகாலம் முதல் கைக்கொண்டு வந்த கிராமிய மணம் கமளும் கலை அம்சங்களைக் கைவிடாது, தமது எதிர்காலப் பரம்பரையினருக்கு கடத்துவோம் என்ற நோக்கத்துடன் கிழக்கில் குறிப்பாக, மட்டக்களப்பில் சில கிராமங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

அந்த வகையில், மட்டக்களப்பு மாவட்டம், செட்டிபாயைம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உத்சவத்தை முன்னிட்டு, களுதாவளை கிராமத்தின் சிறுமிகளைக் கொண்டு பழக்குவிக்கப்பட்ட ‘கண்ணகை அம்மன் கரகம்’ சதங்கையணி விழா, அண்மையில் களுதாவளை வாகரையார் வீதியில் இடம்பெற்றது.

இதன்போது களுதாவளைக் கிராமத்தைச் சேர்ந்த சிறுமியர்களைக் கொண்டு பயிற்றப்பட்ட கரகம், வடிவமைக்கப்பட்ட களரியில் வைத்து சிறுமியர்களுக்கு காற்சதங்கை அணிவிக்கப்பட்டு, ஆற்றுகை செய்யப்பட்டன. இக்கரகத்தை களுதாவளையைச் சேர்ந்த அண்ணாவியார் த.சந்திரலிங்கம், ஏடுஅண்ணாவியார் சி.க. தெய்வநாயகம், மத்தளக் கலைஞர்களான சி. கிஷோவர்மன், ம. ஷகிர்தனன் ஆகிய குழுவினர் பயிற்றுவித்துள்ளனர்.

செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உத்சவத்தை முன்னிட்டு, இவ்வாறு களுதாவளைக் கிராமத்தில் சிறுவர்களைக் கொண்டு கண்ணகை அம்மான் கரகம் அரங்கேற்றப்படுவது வழக்கம். மாறாக, கொவிட் - 19 காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக ஆலய உற்சவங்களும் இடம்பெற்றிருக்கவில்லை. இக்கரகம் அரங்கேற்றம் செய்யப்படாமலிருந்து வந்த நிலையில், இவ்வருடம் மீண்டும் அரங்கேற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போதைய காலகட்டத்தில் கிராமியக் கலைகளைக் காண்பது அரிதாகும். கிராமியக் கலைகளைப் பயிற்றுவிப்பதற்காக பெற்றோர்கள் தமது பிள்ளைகளை அனுமதிப்பதும் மிகக்குறைவாகும். மாறிமாறி கல்வியிலேயே காலம் கடந்து கொண்டிருக்கின்றது.

இந்நிலையிலும் சிறார்களின் கலைத்திறமைகள் களுதாவளைக் கிராமத்திலிருந்து வெளிப்படுவதானது, மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இதற்காக அண்ணாவியார் சந்திரலிங்கம், தெய்வநாயம் ஆகியோர், இக்கிராமத்திற்கு மாத்திரமின்றி கிராமியக் கலைக்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றார்கள். அவர்கள், தமது காலத்தில் மாத்திரம் இதனை மட்டுப்படுத்திவிடாமல் இன்னும் இரண்டு இளம் அண்ணாவிமார்களையும் பழக்கியுள்ளார்கள். எனவே பன்நெடுங்காலமாக களுதாவளைக் கிராமத்தில் இருந்து கைக்கொள்ளப்பட்டு வரும் இக்கலை, சந்திரலிங்கம் அண்ணாவியாரின் காலத்தோடு மட்டுப்படுத்திவிடாமல் அது தொடர்ந்து இடம்பெற வேண்டும்.

முன்னான வலையக் கல்விப் பணிப்பாளரும் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தின் தலைவருமான க. பாஸ்கரன் இதுகுறித்துத் தெரிவிக்கும்போது கூறியதாவது: “பழங்காலத்தில் மன்னர்களும் அரசர்களும் கலைகளை வளர்த்துள்ள போதிலும், பிற்காலத்தில் கோவில்கள்தான் கலைகளை வளர்துள்ளன. கோவில்களில் திருவிழாக்கள் ஆரம்பித்து விட்டாலே, கலைகளும் அரங்கேற்றப்படுவதுவும் வழக்கமாகக் கொண்டுள்ளன. மக்களும் திருவிழாக்களைக் காண்பதைவிட கலைகளைக் கண்டு இரசிப்பதற்கு வருவது வழக்கமாகும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக தற்காலத்தில், இவ்வாறான நிகழ்வுகள் அருகிக் கொண்டு செல்கின்றன. இந்த நிலையிலும் களுதாவளை மக்கள் ஒன்றுகூடி, பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இக்கலைகளைப் பயிற்றுவிப்பதற்கு அனுப்பி வைத்துள்ளமை மிக வரவேற்கத்தக்கதாகும்” என்றார்.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளர் ஞா.யோகநாதன் கருத்துத் தெரிவிக்கும்போது, “இந்நிலையில் தமிழர்களிடத்தில் கிராமியக் கலைகள் தொன்றுதொட்டு பரம்பரை பரம்பரையாக கடத்தப்பட்டுக் கொண்டே வருகின்றது. இதனை எமது எதிர்கால சந்ததியினர் மறக்காமல் கைக்கொண்டு வரவேண்டும். எனினும் இவ்வாறாக கிராமியப் கலைகளை குழிதோண்டிப் புதைக்கப்படாமலிருப்பதற்கு பெரியர்கள் அனைவரும் ஒருமித்து செயற்படல் வேண்டும்” என்றார்.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம் கருத்துத் தெரிவிக்கும்போது கூறியதாவது: “சில விடயங்களுக்குப் பெறுமதியில்லை. தற்காலத்தில் சிறார்களின் கலைத்துவத்தை நோக்குமிடத்து மனதிற்கு மிகவும் ஆத்மார்த்தமாக இருக்கின்றது. கலைகள் மருவிக் கொண்டு செல்கின்ற இக்காலகட்டத்தில், களுதாவளைக் கிராமத்தில் வருடாந்தம் சிறுவர்களைக் கொண்டு பயிற்றப்பட்டு கண்ணகை அம்மன் கரகம் அரங்கேற்றப்பட்டு வருவது மிகவும் வரவேற்றகத்தக்கதாகும். தற்கால தலைமுறையினருக்கு கலைகள் கையளிக்கப்படுவதில் பாரிய பங்கு உள்ளது. தமிழர்களிடத்தில் கலைகளுக்கு நாம் கொடுக்கின்ற மதிப்பும் அதுசார்ந்த விடயங்களும் அளவிட முடியாதவையாகும்.

“கோவில்களிலே இருக்கின்ற கனதியான நம்பிக்கைள், சடங்கு சம்பிரதாயங்களை மறந்து போகின்ற தருணங்களில் இவ்வாறான கலையாற்றுகைகளின் தேவைப்பாடுகள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. பொருளாதார ரீதியில் நெருக்கடிகளை மக்கள் சந்தித்திக் கொண்டிருக்கின்ற இக்காலகட்டத்தில் இவ்வாறான நிகழ்வுகள்தான் மனத்துக்கு ஆறுதலளிக்கின்றன” என்றார்.

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சுவாமி விபுலாந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் போராசிரியரான கலாநிதி சு. சிவரெத்தினம் கருத்துத் தெரிவிக்கும்போது கூறியதாவது: “பாலர் பாடசாலைக்குச் செல்லும் போதே பிள்ளைகளை பகுதி நேர வகுப்புகளுக்குப் பெற்றோர் கூட்டிச் செல்கின்றார்கள். சிறுவயதிலேயே சிறுவர்களை பெரும் சுமைக்குபடுத்துவதனால் அவர்களின் ஆளுமைகள் பாழாகி விடுகின்றன. படிக்கின்ற வயதில் பிள்ளைகள் படிப்பார்கள்; படிப்பதற்குரிய சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டியதுதான் பெற்றோரின் கடமையாகும். அந்தச் சூழல் என்பது பிள்ளைகளின் மனவெழுச்சியை ஊக்குவிப்பதாக, அவர்களின் படிப்பாற்றல்கள், சிந்தனைகள் உள்ளிட்டவற்றை வெளிக் கொணர்வதாக அமைதல் வேண்டும்.

“எமது கிராமத்தில் உள்ள அண்ணாவியார் சந்திரலிங்கத்தின் காலத்துக்குப் பின்னர் இந்தக் கலையை முன்நோக்கிக் கொண்டு செல்ல இளைஞர்கள் பயிற்றப்பட வேண்டும். இது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இல்லாமல் மேலும் பரந்துபட்டு ஏனைய கிராமங்களுக்கும் வியாபித்து, கரகாட்டக் கலையை மிளிரச் செய்ய வேண்டும்” என்றார்.

மேற்படி கல்வியியலாளர்களின் கருத்துகளை உற்று நோக்குகையில், தமிழர்களிடத்தில் ஆதிகாலம் முதல் காணப்பட்டு வந்த கிராமியக் கலைகள், மெல்ல மெல்ல மருவிக் கொண்டு வருவதை அறியமுடிகின்றது. எனினும், களுதாவளைக் கிராமத்தவர்கள் போன்று, எங்கெங்கெல்லாம் தமிழினம் செறிந்து வாழ்கின்றதோ, அங்கெங்கல்லாம் தமிழர்கள் பேணிவந்த கலை அம்சங்களை தொடர்ந்து பேணுவதற்கும், அதனை அடுத்த சந்ததியினருக்குக் கடத்துவதற்கும் அனைவரும் திடசங்கற்பம் பூணும் பட்சத்திலேயே, மருவி வரும் கலைகள் மறைந்து போகாமல் கடைப்பிடித்தொழுகலாம் என்பதுவே அனைவரினதும் நம்பிக்கையாகும்.

# புதிய எதிர்வுகூறல்கள் நம்பிக்கை தருமா?

எரிபொருள் பிரச்சினை நாட்டில் தலைவிரித்தாடும் நிலையில், ஜூலை 22ஆம் திகதி வரை பெற்றோல் கப்பல் ஒன்று இலங்கைக்கு வருவதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவு; டீசல் கப்பல் ஜூலை மாத நடுப்பகுதியளவில் எதிர்பார்ப்பதாக என பிரதமரின் அலுவலக பிரதான ஊழியர் சாகல ரத்நாயக்க குறிப்பிட்டிருந்தார்.

மூன்று மாதங்களுக்கு போதுமான லிட்ரோ எரிவாயு விநியோகம் ஜூலை மாதம் 6 ஆம் திகதி முதல் இலங்கைக்கு தொடர்ச்சியாக விநியோகிக்கப்படுவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவன தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்திருந்தார். நாட்டின் உணவுப் பொருட்கள் விநியோகம் முதல் நோயாளிகளை வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்லல், குடும்பத்தில் உள்ளவர்களுக்கான நாளாந்த உணவு வேளைகளைப் பெற்றுக் கொள்வதற்கு தினசரி தமது ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்களில் விநியோகங்கள், நாட்கூலிகளில் ஈடுபடுவோர் பெரும் சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் அரசாங்கத்தால் ஜூலை 10 ஆம் திகதி வரை பொது மக்களுக்கு எரிபொருட்கள் சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்களினூடாக எரிபொருட்கள் விநியோகிக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய சேவைகளாக பெயரிடப்பட்டுள்ள துறைமுகம், விமான சேவைகள், உணவு உற்பத்தி, சுகாதார சேவைகள், குறுந்தூர போக்குவரத்து சேவைகள், ஏற்றுமதி மற்றும் சுற்றுலா போன்ற துறைகளைச் சேர்ந்த வாகனங்களுக்கு மாத்திரமே வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாளாந்தம் பணி செய்து தமது குடும்பங்களை வாழ வைக்கும் நபர்களுக்கு தாம் மேற்கொள்ளும் பணிகள் தமக்கு அத்தியாவசியமானவையாக அமைந்துள்ளன. ஒரு சில தினங்கள் எனக்கூறினால் அவர்களாலும் பொறுத்துக் கொள்ள முடியும். இவ்வாறு சுமார் இரண்டு வார காலப்பகுதிக்கு எரிபொருள் வழங்க முடியாது என கூறினால் சாதாரண மக்களின் நிலை என்ன?

இந்த நிலைக்கு முகங்கொடுக்க நேரிடலாம் என ஏன் அரசாங்கத்துக்கும், அமைச்சர்களுக்கும் முன்பே தெரியாதா? குறிப்பாக இந்தியாவிடமிருந்து கடன் அடிப்படையில் எரிபொருள் பெற்றுக் கொள்வது ஏப்ரல் மாதம் முற்பகுதியில் ஆரம்பமானது. அவ்வாறு பெற்றுக் கொண்ட முதல் தொகுதியிலிருந்து ஒழுங்கான திட்டமிட்ட விநியோக பொறிமுறையை நடைமுறைப்படுத்தியிருந்தால் இந்த நிலையை ஓரளவு தவிர்த்திருக்கலாம்.

மாறாக ஜூன் மாத நடுப்பகுதியில் இறுதி எரிபொருள் கப்பல் வரும் வரை காத்திருந்துவிட்டு இவ்வாறானதொரு முடிவை மேற்கொள்வது, அரசாங்கத்திலுள்ள பொறுப்புக்கூற வேண்டியவர்களின் இயலாமையின் தாக்கத்தை பொது மக்கள் மீது சுமத்துவதை காண்பிக்கின்றது.

இவ்வாறு பொது மக்களுக்கு தொடர்ந்து ஆசை வார்த்தை கூறி, இறுதியில் ஏமாற்றுவது வழமையாகிவிட்ட நிலையில், தற்போதைய புதிய எதிர்வுகூறல்கள் மக்களுக்கு எந்தளவு நம்பிக்கையளிக்கும்? வரட்டும் பார்ப்போம்; வீண் பேச்சு வேண்டாம்; செயலில் காட்டுங்கள்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# புலம்பெயர் உறவுகள் மீதான கவனம்

**லக்ஸ்மன்**

இலங்கையின் நெருக்கடியான பொருளாதாரச் சிக்கல் விவகாரத்துக்குள் அண்மைக்காலமாக புலம்பெயர் உறவுகள் முதலீடுகளைப்பற்றிய பேச்சுகள் அதிகரித்து வருகின்றன. இந்தப் பேச்சுகள் உண்மையானவைதான்; அத்துடன் தேவையானவையும் கூட.

ஆனால், புலம்பெயர் உறவுகள் முதலீடுகளை மேற்கொள்வதாயின் அவர்களுக்கும், அவர்கள் முதலிடும் பணத்திற்கும் பாதுகாப்பு எங்கிருந்து கிடைக்கும் என்ற கேள்விதான் அதற்குள் நெருடலாக இருக்கிறது.

இந்த இடத்தில், அண்மையில் ஐரோப்பியப் பயணம் மேற்கொண்டிருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் நோர்வேயிலுள்ள தமிழர்களைச் சந்தித்துப் பேசியபோது கூறிய, “இலங்கையர்களின் வாழ்க்கை தரத்தினை தமிழ் தேசிய கூட்டமைப்பால் மேம்படுத்த முடியும். ஊழல் மோசடி, இலஞ்சம் ஆகியவை தற்போதைய நிலைமைக்கு காரணம்” என்ற கருத்துகள், தற்போது பேசுபொருளாக மாறியிருக்கின்றன.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு வழங்க வேண்டும் என்பதில் இன்னமும் அரசாங்கத்துக்குள் தீர்மானமில்லை. தற்போதைய பிரச்சினைக்கு பிரதான காரணியாக உள்ள இனப்பிரச்சினையைத் தீர்த்துவிட்டால், நாட்டின் பெரும்பாலான பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்துவிடும் என்பது இன்னும் பலருடைய கருத்தாக இருக்கிறது.

சிங்கள இளைஞர்கள், தமிழ் மக்களின் முள்ளிவாய்க்கால் நினைவைக்கூட ‘கோட்டா கோ கம’வில் நடத்தி முடித்துவிட்டார்கள். ஆனாலும் அரச இயந்திரம், அதனை இயக்குகின்ற ஏனைய தரப்புகள் இன்னமும் தமிழர்கள் விடயத்தில் எந்த ஒரு சாதகமான சமிக்ஞைகளையும் வெளிப்படுத்தியதாகத் தெரியவில்லை. மாறாக, இருக்கின்ற மாகாண சபை அதிகாரங்களைக்கூட இல்லாமல் செய்வதற்கான திரைமறைவு வேலைகள் நடைபெறுவதாகவே தெரிகிறது.

இவ்வாறான நிலையில்தான், இலங்கையின் பொருளாதார நெருக்கடியால், ராஜபக்ஷ குடும்பத்தினரின் ஆட்சி மீது மக்களை வெறுப்புக் கொள்ள வைத்தது. அதனால், உருவான ‘கோ ஹோம் கோட்டா’, ‘மைனா கோ கம’ போன்றவைகள் நாட்டின் நெருக்கடிகளாகவே மாற்றம் பெற்றன.

இந்த நெருக்கடிகள் தீர்க்கப்படாமலேயே ஆட்சிமாற்றத்துக்கு ஒப்பான பதவி விலகல்களும் பதவி ஏற்புகளும் நடைபெற்றன. இவற்றாலும் இன்னமும் மீட்சி கிடைக்கவில்லை. இருந்த சிக்கலும் நெருக்கடியும் மேலும் வலுப்பெற்றேயிருக்கிறது.

இலங்கையில் தமிழர்களுக்கு அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட காரணத்தால் எதிர்ப்பு போராட்டங்கள் உருவாகி, ஆயுதப் பேராட்டமாக வலுப்பெற்றது. அதனால், 30 வருடங்களுக்கும் மேலான சிவில் யுத்தம் ஒன்றை நாட்டில் நடத்த வேண்டிய நிலை உருவனது.

ஒரு நாடு மற்றுமொரு நாட்டுக்கு எதிராக நடத்துகின்ற யுத்தத்துக்கு நிகரான யுத்தம் ஒன்றே இலங்கையில் நடைபெற்று முடிந்தது. அந்த யுத்தத்தில் உலகின் பெரும்பாலான நாடுகள் பங்கு கொடுத்திருந்தன. ஆனால், அந்த நாடுகள் தமிழர்களுக்கு எதிராகவே செயற்பட்டிருந்தன. ஆனால், இப்போது அவற்றை மறுக்கவே தலைப்படுகின்றன.

யுத்தத்திற்காக கடன் பெற்று அதிக நிதி செலவிடப்பட்டது. 2009ஆம் ஆண்டு காலத்திற்கு பிறகு, பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி செலவிடப்பட்டது; இப்போதும் செலவிடப்படுகிறது. நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்கு மூலகாரணம் என்ன என்பதனை உணராதவர்களாக இருந்து வருவது எதற்காக என்பதுதான் கேள்வி.

இவ்வாறிருக்கையில், நாட்டில் 73 வருடகால தீர்க்கப்படாத தமிழர்களின் உரிமை சார்ந்த பிரச்சினைகளும் அவற்றால் ஏற்பட்ட இன்னல்களினாலும் நாட்டை விட்டுச் சென்று புலம்பெயர் தேசங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்கள், இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உதவ வேண்டும் என்கின்ற பார்வை, பேச்சுகள், கருத்துப் பகிர்வுகள் நடைபெற்று வருகின்றன.

ஆனால், தமிழர்களின் நிலைப்பாடானது தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு வழங்கினால் உலகளாவிய ரீதியில் உள்ள 13 இலட்சம் புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வார்கள் என்பதாகவே இருக்கிறது.

ஜனாதிபதி, பிரதமர் பதவி விலக வேண்டும் என்ற பெரும்பான்மைச் சிங்கள மக்களின் கோரிக்கை வலுவடைந்து வருகின்ற நிலையில், அவர் பதவி விலகாவிட்டாலும் பரவாயில்லை தீர்வை வழங்குங்கள் என்று அவர்கள் கோருவது நியாயமானதாகவே இருக்கிறது. இது காலத்தின் கட்டாயமும் கூட.

இலங்கையின் தற்போதைய நிலைமை கவலைக்குரியதாகவே மாறிவருகிறது. போக்குவரத்துக்கான எரிபொருளையே தேவையான அளவில் இல்லாவிட்டாலும் ஓரளவுக்கேனும் வழங்குவதற்கு முடியாததாகிவிட்ட அரசாங்கம், ஏற்பட்டு வருகின்ற வறுமைக்கும் பட்டினிச் சாவுகளுக்கும் எவ்வாறு தீர்வு வழங்கவுள்ளது என்பதுதான் இப்போதைய சந்தேகம்.

இந்த நிலையில்தான் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு மக்களின் அபாயகரமான நிலை தொடர்பில் அக்கறையில்லை என்ற கருத்தும் வெளிவருகிறது. மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த வேண்டிய ஜனாதிபதியும் அரசாங்கமும் கைவிரித்த நிலையில்தான் இலங்கை இருக்கிறது.

புலம்பெயர் தமிழர்களைப் பொறுத்தவரையில் வடக்கு- கிழக்கு வாழ் தமிழ் மக்களையேனும் அவர்கள் காப்பாற்றியாக வேண்டும். ஆனால் அதனைக்கூட அவர்களால் சரியானமுறையில் மேற்கொள்ள முடியாத நிலைமையே காணப்படுகிறது. கடந்த காலங்களில் யுத்தத்தின் கடுமையால் பாதிப்புற்ற, அதனை எதிர்கொண்ட வடக்கு- கிழக்கு மக்கள், இப்போது மிக இறுக்கமான நெருக்கடியை எதிர்கொள்கிறார்கள்.

தற்போதைய நிலையில், அதிகாரிகளும் பொது மக்களும் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஒருவருக்கொருவர் முரண்பட்டுக் கொள்கின்ற நிலைமையே காணப்படுகிறது. அதற்கு சில தினங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட அத்தியாவசியத் துறைகளுக்கு மாத்திரம் என்ற அறிவிப்பும் காரணமாகும். நாடு ஆதிகாலச் சூழலுக்குச் சென்று கொண்டிருக்கின்றது. சைக்கிளும் மாட்டுவண்டியும் கால்நடையும்தான் இப்போது நாட்டு மக்களின் போக்குவரத்து சாதனங்களாக மாறிவிட்டது.

நாடு என்ற ரீதியில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை எவ்வாறு முகம் கொடுப்பது. இதிலிருந்து எவ்வாறு வெளியேறுவது, எதிர்காலம் நோக்கி எப்படி முன்னேறி செல்வது என்பவைகள் பற்றிச் சிந்திப்பதனைவிடவும் நாட்டில் இப்போதும் தமிழர்களின் நிலங்களை எவ்வாறு அபகரிப்பது ஆதிக்கத்துக்குள்ளாக்குவது, பௌத்தத்தின் ஆதிக்கத்தினை எவ்வாறு வலுப்படுத்துவது என்பவைகள் குறித்த, அரச இயந்திரம் சிந்தித்துக் கொண்டிருக்கிறது. அதற்கு பாதுகாப்புத் தரப்பும் முழு ஆதரவையும் பாதுகாப்பையும் வழங்கி வருகிறது.

கிழக்கில் யுத்தம் நடைபெற்ற வேளைகளிலும், அதற்குப் பின்னரும் தாராளமாக அவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவந்த நிலையில், வடக்கில் மேலும் மேலும் அதிகளவில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறான விசேடமான முன்னெடுப்புக்கள் இப்போதைய பொருளாதார நெருக்கடிக்குள்ளும் நடைபெறுகையில் நாம் இவர்களிடமிருந்து எவ்வாறு தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வை எதிர்பார்ப்பது?

இவ்வாறிருக்கையில், யுத்த காலத்திலும் அதற்கு பின்னரான காலப்பகுதியிலும் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு கூட பொறுப்புக் கூற மறுக்கின்ற இலங்கை அரசாங்கத்திடம் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கொடுங்கள் என்று கேட்க முனைவது பொருத்தமானதுதானா?

இவ்வாறான நிலையில், எமது புலம்பெயர் உறவுகள் இங்கு முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்வருவார்களாயின் அவர்களுக்கு இங்கு பாதுகாப்பு வேண்டும். அதற்கும் மேலாக அவர்கள் முதலிடும் பணத்திற்கு இங்கு பாதுகாப்பு வேண்டும். அந்தவிதமான நிலைமை இங்கு உருவாக்கப்பட வேண்டும். மாகாணசபைகளுக்கான நிதி அதிகாரங்களே அதற்கான ஒரே வழி என்கின்ற கருத்துகளும் முன்வைக்கப்படுகின்றன.

தனி ஈழத்துக்கான கோரிக்கையுடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழர்களுடைய போராட்டம், இந்திய அரசாங்கத்தின் இணைவுடன் உருவான இந்திய - இலங்கை ஒப்பந்தமும் 13ஆவது திருத்தச் சட்டமும் இலங்கைக்குக் கொண்டுவந்த மாகாண சபைகளுக்கான அதிகாரத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்டன.

வடக்கு - கிழக்கு இணைப்புடனான அந்த அதிகாரம் கூடச் சரியாக வழங்கப்பட்டிருக்கவில்லை. அதனால்தான் விடுதலைப் புலிகள் அம்முறையினை எதிர்த்தார்கள்; ஏற்க மறுத்திருந்தார்கள். ஆனால், அதனை ஏற்று பின்னர் தமிழ் ஈழ அறிவிப்பினை மேற்கொண்டுவிட்டு, வடகிழக்கு மாகாண சபை முதலமைச்சர் வரதராஜபெருமாள் நாட்டைவிட்டு தப்பிச் சென்று இந்தியாவில் வாழ்ந்தார்.

ஆனால், இப்போது இந்த மாகாண சபை முறைமையை வலுப்படுத்திக் கொடுங்கள் என்று கேட்பவர்களும், இதில் ஏதுமில்லை தமிழர்களுக்கு சுயாட்சி அதிகாரத்தினைக் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டிருப்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

நிதி சார்ந்த ஊழல்களையும் மோசடிகளையும் நடத்தி முடித்து அரசியல், அதிகாரத் துஸ்பிரயோகங்களையும் தமக்குள்ளேயே வைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு நாட்டில் பொருளாதார நெருக்கடியும் அதன் விளைவுகளும் சர்வ சாதாரணமாகவே இருக்கும். இதனை மாற்றியமைத்துவிடுவது சாதாரண விடயமல்ல. சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள், அமெரிக்க அரசாங்கத்தின் பிரதிநிதிகள் கொடுக்கும் அறிக்கைகளும் அவர்களின் திட்டங்களும் நாட்டை மீட்க வேண்டும் என்று நம்பினாலும், புலம் பெயர் உறவுகளின் ஒத்தாசை முக்கியமே. அதற்கு ஒரே தீர்வு, தமிழர்களின் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வாகும்.



## வாழ்வியல் தரிசனம்

காலம் வந்ததும் காலன் வருவான் என்று கூறுவதுண்டு. எவரும் தொடர்ந்து உலகில் வாழமுடியாது. இன்று இது எங்கள் உலகம். கண்ணை மூடினால், எதுவும் தெரியாது. இறப்பைப் பற்றிக் கலவரப்படுவதில் என்ன பிரயோசனம்?

மனிதன் கண்முன்னாலேயே மானிட வாழ்வின் நிலையாமை பற்றித் தெரியவில்லையா? எனினும் அநேகர் மமதை, அறியாமையால் வாழ்வு நிரந்தரம் என்று நம்புகின்றார்கள். சின்ன நோய் வந்தாலும் பயந்து போய் விடுகின்றார்கள்.

நோய் வந்த பின்னர்தான் கடவுள் ஞாபகமும் வந்துவிடுகின்றது. உயிர் போகக்கூடாது என்று எண்ணுபவர்கள், தொடர்ந்து எவ்வளவு காலமும் தங்கள் உயிர் தங்களை விட்டு ஏகக்கூடாது என எண்ணுவதே அறியாமை.

கடவுள் மரணத்தை மறுப்பதில்லை. ஆனால், அவர் காலன் அல்ல! புதிதுபுதிதாக உலகம் வளர, உருவாக மரணம் தேவைப்படுகின்றது. இந்த நிலை சாதாரணமானது என்பதை மனதில் நிறுத்துக! அச்சம் என்பது களிப்புக்க எதிரி.

எனவே, வாழும்வரை முழுமையாக வாழுங்கள். பயம், பலவீனம், சந்தேகங்களைக் களைக. ஒரு வினாடியையும் வீணாக்க வேண்டாம். என்றும் எப்போதும் துணிவுடன் வாழ்க!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கிளிநொச்சி மாவட்டத்தில்
### கையிருப்பிலுள்ள உரங்களை பகிர்ந்தளிக்கவும்

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மேட்டுநில பயிர்செய்கைகளும் உப உணவுச் செய்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறான செய்கைகளுக்கு, இதுவரை எந்தவிதமான சேதன உரங்கள், இராசாயன உரங்கள் என்பன வழங்கப்படாத நிலை காணப்படுகின்றது.

எனவே, கிளிநொச்சி மாவட்டத்தில் கமநல சேவை நிலையங்களில் கையிருப்பில் தற்போது உள்ள இராசயன உரங்களைப் பகிர்ந்தளிக்க, கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட பிரதி ஆணையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கமநல சேவை நிலையங்களில் 8320 மெட்ரிக் தொன் யூரியா, 3493 மெட்ரிக் தொன் டிஎஸ்பி, 3133 மெட்ரிக் தொன் m.o.p. என்பன கையிருப்பில் உள்ளன. இவற்றிலும் குறிப்பாக அக்கராயன் குளம் கமநல சேவை நிலையம், முழங்காவில் கமநல சேவை நிலையம் ஆகியவற்றில் அதிகளவான உரங்கள் கையிருப்பில் இருப்பதாக புள்ளிவிவரங்கள் மூலம் அறிய முடிகின்றது.

எனவே, குறித்த உரங்களை கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களிலும் மேட்டுநிலச் செய்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

– யது பாஸ்கரன்

எரிபொருள் தேவையில்லை; ஏறியிருந்தால் போதும்.....

# புதிய ரிக்ஷா வண்டி

எஸ். அஷ்ரப்கான்

**எரிபொருள் பிரச்சினை நாடளாவிய ரீதியில் தலைவிரித்தாடும் இன்றைய சூழலில், எரிபொருள் இல்லாமல் ஆறுபேர் பயணிக்கக்கூடிய புதிய போக்குவரத்து ரிக்ஷா வண்டி, சாய்ந்தமருதில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**





அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருதை சேர்ந்த முஹம்மது நிஸார் என்பவரே எரிபொருள் இல்லாமல், ஆட்களைச் சுமந்து செல்லும் வகையிலான புதிய ரிக்ஷா சைக்கிள் வண்டியைக் கண்டுபித்துள்ளார்.

ஐந்து குழந்தைகளுக்கு தந்தையான இவர், சுமார் இரண்டு வாரங்களுக்கு மேலாக முழுமையாகச் செலவிட்டு குறித்த ரிக்ஷாவைத் தயாரித்துள்ளார். ஒரே நேரத்தில் ஆறு பாடசாலை மாணவர்கள் அமர்ந்து பயணம் செய்யக்கூடிய வசதிகளை இந்த ரிக்ஷா கொண்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலக ஊழியர்கள் பெட்ரோல் இல்லாத இக்கால பகுதியில் போக்குவரத்துக்காகக் கஷ்டப்படும் நிலையை கருத்தில் கொண்டே, இதைத் தயாரித்ததாக முஹம்மட் நிஸார் தெரிவிக்கின்றார்.

வெல்டிங் வேலைகள் செய்து வரும் இவர், இவ்வாறான வண்டிகளை தொடர்ச்சியாக செய்து, பயனாளிகளுக்கு வழங்கப் போவதாகவும், தற்போது இரண்டாவது வண்டியை செய்வதற்கான வேலைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கலை, பண்பாடுகளை வளர்த்தெடுத்து

# ஏழைகளுக்கு உதவும் மன்றம்

**தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது**



லயன் எஸ்.கே தளையரட்ணம் MAF
பொதுச்செயலாளர், தந்தை செல்வா நற்பணி மன்றம்

**தந்தை செல்வா நற்பணிமன்றம் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கத்தையும் கொள்கைகளையும் பின்பற்றி, 25 ஆண்டுகள் நிறைவேறியுள்ள இவ்வேளையில், ஆற்றிய சேவைகளையும் எண்ணிப்பார்த்தல் பொருத்தமாகும்.**

தந்தை செல்வா நற்பணி மன்றம், 12.12.1997இல் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது முதல், 2000ஆம் ஆண்டுவரை, கல்விச் சேவைகள், அறநெறிசார்ந்த சேவைகள் நிறைவேற்றப்பட்டு வந்தன. கொழும்பு மத்திய இந்து வித்தியாலய அதிபர் சற்குணம், கணபதி மகளிர் வித்தியாலய அதிபர் தில்லைநாதன் ஆகியோரின் உதவியுடன் மன்றத்தின் யாப்பு விதிகளும் பதிவும் முன்னெடுக்கப்பட்டன.

பின்னர், கொழும்பு மத்திய இந்து வித்தியாலயத்தில் 'தந்தை செல்வா அறநெறிப்பாடசாலை' உருவாக்கப்பட்டது. 2003ஆம் ஆண்டு, இந்து கலாசாரத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டது. இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய வங்கிகளில் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன. கொழும்பு மாவட்ட கிராம சேவையாளர் யு.சு.யு.ஆ லாபீர், இதற்கு உறுதுணையாக இருந்தார்.

மன்றம் யாப்பு விதிப்படி பொதுச்சபை, நிர்வாகசபை, தலைவர், செயலாளர், பொருளாளர், மேல் சபை (நிர்வாக சபையில் உள்ளவர்களை நிர்வகிக்க விசேட அதிகாரம் கொண்டது) உருவாக்கப்பட்டது. இந்த உட்கட்டமைப்பு மூலம், மன்றத்தின் கல்விச் சேவை, சமய சேவை, சமூக சேவை, கலாசார சேவை என்பன முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மன்றம் இதுவரை இனம், மதம் வேறுபாடு இன்றி, 21,000 பேருக்கு இலவச கண்பரிசோதனை செய்து மூக்கு கண்ணாடிகளை வழங்கியுள்ளது. இலங்கையின் பல பிரதேசங்களிலும் சிறப்பாகப் பணியாற்றிய அதிபர்கள், கிராம சேவையாளர்கள், ஊடகவியலாளர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள், மருத்துவர்கள் போன்ற 1,000 பேரை கௌரவித்து, தந்தை செல்வா விருதுகளையும் வழங்கியுள்ளது.

தந்தை செல்வா அறநெறிப் பாடசாலையின் மாணவர்களின் ஆன்மீக நலன் பேண யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், ரம்பொடை, சிலாபம், கதிர்காமம், உடப்பு போன்ற பிரதேசங்களில் உள்ள கோவில்கள் தரிசிக்கப்பட்டன. டொக்டர் இராம ஜெயத்தின் பண உதவிகள் மூலம் இவை சிறப்பிக்கப்படுகிறது. வருடாந்த மகாசிவராத்திரி காலங்களில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சிறப்பு விருதுகள் வழங்கப்படுகின்றன.

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசனின் உதவியுடன் மன்றம் நிலையாக இயங்க வேண்டும் எனும் நோக்கத்துடன் அவரது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து கணினி, டுப்லோ இயந்திரம், போட்டோகொப்பி இயந்திரம், பிரின்டர், சங்கீத உபகரணங்கள், கதிரைகள், போன்ற உபகரணங்களை வழங்கியிருந்தார்.

மன்றத்தின் எதிர்கால நோக்கமாக, தந்தை செல்வா நற்பணி மன்றத்திற்கென ஒரு தனியான இடம் பெறப்பட வேண்டும். அந்த இடத்தில் அறநெறிப் பாடசாலை எமது கலை, கலாசார பண்பாடுகள் வளர்த்தெடுக்கப்படும் நோக்கத்துடன் கலை சார்ந்த வகுப்புகளையும் குறைந்த கட்டணத்தில் நடத்தல் வேண்டும். வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களின் பூப்புனித நீராட்டு விழா, திருமண வைபவங்கள், கலாசாரம் சார்ந்த நிகழ்வுகள் நடத்த இடம் ஒதுக்குதல் வேண்டும்.

தந்தை செல்வா நற்பணிமன்றம், மேல் மாகாணத்தில் அமைந்தது போல் வட மாகாணம், கிழக்கு மாகாணம், மலையகம் போன்ற பிரதேசங்களிலும் விஸ்தரிக்கப்பட்டு, சம்மேளனத்தின் சேவைகளை பன்முகப்படுத்தலும் விரிவாக்கமும் செய்ய வேண்டும். இவ்வாறான எமது சேவைகள் ஊடாக, இன மத சகோதரத்துவம் வளர்த்தெடுக்கப்படும் என்பது உறுதி.

எமது விளையாட்டுக் கழகத்தை புனர்நிர்மாணம் செய்து, மாணவர்களின் உடல், உள வளர்ச்சிக்கு வித்திடல் வேண்டும். 25 ஆண்டு காலமாக மன்றத்தின் வளர்ச்சிக்காக வித்திட்ட அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

அறநெறிப் பாடசாலையில் எந்த விதமான வேதனமும் இன்றி சேவையாற்றிய, சேவையாற்றிக் கொண்டிருக்கும் அனைத்து ஆசான்களையும் பாராட்டுகிறோம்.

மன்றத்தின் வளர்ச்சிக்காக உதவிய அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், அதிபர்கள், ஆசான்கள், சமயபெரியார்கள், கிராம சேவையாளர்கள், ஊடகவியாலாளர்கள், அரிமா சங்க உறுப்பினர்கள், டொக்டர்கள், வர்த்தகர்கள் அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.



# ஈழத்தின் முன்னோடி இலக்கிய செயற்பாடு

**லண்டன் வெளியீட்டு விழாவில் மு. நித்தியானந்தன்**

லிங்கநகர் சண்முகநாதன் கணேஷ்






“எழுத்தையே தொழிலாக, வாழ்வாகக் கொண்ட பத்திரிகையாளர்கள் நமது சமூகத்தில் கவனிப்பாரற்றுப் போய்விடுகிறார்கள். அவர்களது வாழ்க்கையைப் போற்றுவார் யாருமில்லை. இந்நிலையில் வீரகேசரியிலும் தமிழகத்தின் தினமணியிலும் ஆசிரியர்பீடத்தை அணி செய்த எஸ்.எம் கார்மேகத்தின் வாழ்வினை எழுத்தினில் பதிவு செய்த முயற்சி ஈழத்தின் முன்னோடி இலக்கியச் செயற்பாடாகும். 'பத்திரிகையாளர் எஸ்.எம்.கார்மேகம் - வாழ்வும் பணியும்' என்ற நூலினைத் தொகுத்து வழங்கியிருக்கும் எச். எச். விக்கிரமசிங்கவின் பணி, காலம் போற்றும் சிறந்த பணியாகும்” என்று மலையக ஆய்வாளர் மு. நித்தியானந்தன், லண்டன், வெம்பிளி தமிழ் நிலையத்தில் ஜூன் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற புத்தகக் கண்காட்சியின் நூல் வெளியீட்டு அரங்கில், பத்திரிகையாளர் எஸ். எம். கார்மேகம் - வாழ்வும் பணியும் இரண்டாம் பதிப்பை வெளியிட்டு, உரையாற்றிய போது தெரிவித்தார்.

“வெறும் சம்பளத்திற்காக வேலை பார்க்கும் தொழிலாகக் கருதாமல், வீரகேசரியில் தனது பணியை ஆத்மார்த்தமாக செய்து, மலையக இலக்கியத்திற்கு வளம் சேர்த்த கார்மேகத்தை அறிந்த, அவரோடு பணியாற்றிய பல பத்திரிகையாளர்களையும் மேலும் பல ஆளுமைகளையும் இனங்கண்டு இந்நூலைத் தொகுத்து வழங்கியமை விக்கிரமசிங்கவின் சிறந்த தொடர்பு வட்டத்தையும் எடுத்துக்கொண்ட பணியைத் திறம்பட முடிக்கும் ஆற்றலையும் புலப்படுத்துகிறது” என்று அவர் மேலும் பேசுகையில் தெரிவித்தார்.

‘‘கண்டி மன்னர்கள்’, ‘ஈழத் தமிழர் எழுச்சி’, ‘ஒரு நாளிதழின் நெடும் பயணம்’ ஆகிய நூல்களை எழுதிய ஆய்வாளராகவும் எனது தந்தை திகழ்ந்தார். பத்திரிகைப் பணியிலும் பொது வாழ்விலும் முழு நேரத்தைச் செலவிட்டாலும் குடும்ப உறவையும் பண்போடும் பாசத்தோடும் அரவணைத்துச் செல்லும் ஒருவராக அவர் எங்கள் நெஞ்சில் என்றும் குடியிருப்பார்' என்று அவுஸ்திரேலியாவில் வாழும் கார்மேகத்தின் புதல்வி, கனகா கணேஷ் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் “எனது தந்தையான பத்திரிகையாளர் கார்மேகத்தின் பத்திரிகை சாதனைகளை ஆவணப்படுத்தும்முகமாக, ‘வாழ்வும் பணியும்’ என்ற இந்த நூலின் இரண்டாம் பதிப்பு ஜூன் 11ஆம் திகதி லண்டன் மலையக இலக்கிய மாநாட்டில் மு. நித்தியானந்தன் விமர்சன உரை நிகழ்த்தியது எங்களுக்கு பெருமை தரும் நிகழ்வாகும்.

இன்று லண்டன் புத்தக கண்காட்சியில் என்னையும் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள செய்து கௌரவித்ததை எனது பாக்கியமாகவே கருதுகிறேன். ஏற்பாட்டாளருக்கும் எனது நன்றிகள். இந்நூலில் கலைமகள் ஆசிரியர் கீழாம்பூர் சங்கர சுப்ரமணியன் முன்னுரையும், தினகுரல் வார வெளியீட்டின் முன்னாள் பிரதம ஆசிரியர் பாரதி இராஜ நாயகம் அணிந்துரையும் தந்துள்ளனர்.

உள்ளடக்கமாக எனது தந்தையுடன் 1960 முதல் தொடக்கம் பழகிய நண்பர்கள் உடன் பணியாற்றியவர்கள் உட்பட 46 பேர்களின் அரிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. எனது தந்தையைப் பற்றிய இந்நூலுக்கான ஆக்கங்களை கேட்டவுடனேயே அவரவது பரபரப்பான பணிகளுக்கிடையில் சிரமேற்கொண்டு எழுதி கொடுத்ததை நன்றியுடன் நினைவு கூறுகிறேன்.

இந்நூலில் மு.நித்தியானந்தனும் என் தந்தையை பற்றி காத்திரமான கட்டுரையை வடிவமைத்து தந்துள்ளார். எங்கள் தந்தையைப் பற்றி எங்களுக்கே தெரியாத நிறைய விடயங்கள், நாங்கள் ஆவணப்படுத்த மிக உதவியாக இருந்தது அவர்களது ஆக்கங்களே.

மேலும், ‘நினைவினில் வாழும் இனிய தந்தை’ என்ற தலைப்பில் எனது கட்டுரையும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது. இந்நூலின் முதற் பதிப்பு 2018 ஆண்டு நிறைவடைந்த நிலையில் கம்போடிய உலக தமிழர் மாநாட்டில் முன்னாள் அமைச்சரும் இலங்கை மலையக முன்னணி தலைவருமான வே. இராதா கிருஷ்ணன் தலைமையிலும் பின்பு புதுடெல்லி பிரவாசி பாரதீய யுக கேந்திரா நிலையத்தில் கோபியோ அமைப்பின் சர்வதேச மாநாட்டில் மலேசிய தலைவர் செல்வராஜ் தலைமையில் வெளியீடு செய்யப்பட்டது.

எனது தந்தை கார்மேகத்தின் பணிகளும் சேவைகளும் காற்றோடு கலந்து கரைந்து விடா வண்ணம், அவர் பற்றிய தகவல்களை தகுந்தவர்கள் மூலம் கட்டுரை வடிவில் ஆக்கங்களாக சேகரித்து ஆவணப்படுத்தி, ஒரு புத்ததகமாக பதிப்பித்து அதனை மேலும் அலங்கரிக்கும் வண்ணம் வெளியீடு செய்து, எங்கள் கரங்களில் தவழ வைத்த பெருமை எச்.எச் விக்கிரமசிங்கவை மட்டுமே முழுக்க முழுக்க சாரும்.

இலங்கையின் இன்றைய கடும் பொருளாதார நெருக்கடியில் யாரிடமும் எவ்வித பொருளுதவியும் எதிர்பார்க்காமல் ஒரு நூலினை பதிப்பிப்பதில் உள்ள சிரமங்களை சொல்லத்தேவையில்லை. ஆனால் அதனை என் தந்தைக்காற்றும் கடமையாக அவர் முன்னின்று செயல்பட்டமைக்கு தலை வணங்குகிறேன்.

என் தந்தை கார்மேகம் மறைந்து 17 வருடங்களுக்கு மேல் ஆகி விட்ட போதிலும் அவர் அனைவராலும் இன்றும் நினைவு கூறப்படுகின்றார் என்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் எம்.எம் ஜெயசீலன் மீள்பிரசுரம் செய்த கோ. நடேசய்யர் எழுதிய ‘இலங்கை தோட்ட இந்திய தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும்’ என்ற நூலை பதிப்பித்து வெளியிட்டமையைப் பாராட்டி மு. நித்தியானந்தன் உரையாற்றினார்.

இவ்விரு நூல்களையும் இவ் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக விருந்தினராக கலந்து கொண்ட எச்.எச். விக்கிரமசிங்க, இ.பத்மநாப ஐயருக்கு வழங்கி கௌரவித்தார்.



# அபிநயக்ஷேத்திரா அரங்கேற்றம்






அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளி அதிபர்
'கலாசூரி' திவ்யா சுஜேனின் நெறியாள்கையில்
நிவேதா கணேசன், சொக்கர் பிரவீன் ஆகிய
இருவரின் பரதநாட்டிய அரங்கேற்றம்,
சனிக்கிழமை (25) மாலை வெள்ளவத்தை
இராமகிருஷ்ணா மிஷன் மண்டபத்தில்,
தலைமை விருந்தினர் அ. உமாமகேஸ்வரன்
(இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள
பணிப்பாளர்) தலைமையில் நடைபெற்றது.
முதன்மை விருந்தினராக சென்னை மகாகவி
சுப்பிரமணிய பாரதியின் கொள்ளுப்பேரன்
'ஞானபாநு' இசை மேதை டொக்டர் ராஜ்குமார்
பாரதி கலந்து சிறப்பித்தார். நிகழ்வில்
தலைமை விருந்தினர் அ. உமாமகேஸ்வரன்
கௌரவம் பெறுவதையும் இந்தியாவில்
இருந்து வருகைதந்த அணிசேர் கலைஞர்கள்,
நட்டுவாங்கம் செய்த ஆசிரியர் திவ்யாசுஜேன்
ஆகியோர் கௌரவம் பெற்றுக்கொண்ட
பின்னர் பிடிக்கப்பட்ட படத்தையும்
மாணவர்களுக்கானகல்லூரி நடனச்சான்றிதழை
ஆசிரியர் வழங்கி வைப்பதையும் நிகழ்வில்
இடம்பெற்ற நடன நிகழ்வுகளையும் காணலாம்.

(படங்களும் தகவலும்: எஸ். விஷான்)








# மெதடிஸ்த கல்லூரியின் 208ஆவது 'கல்லூரி தினம்'






மட்டக்களப்பு மெதடிஸ்த
மத்திய கல்லூரி தேசிய
பாடசாலையின் 208ஆவது
கல்லூரி தினம் புதன்கிழமை
(29) அதிபர் இராஜதுரை
பாஸ்கர் தலைமையில்
நடைபெற்றது.

புளியந்தீவு மெதடிஸ்த
திருச்சபையில் இடம்பெற்ற
நன்றி செலுத்தும் வழிபாட்டு
ஆராதனையைத் தொடந்து,
காந்தி பூங்காவில் உள்ள
கல்லூரி ஸ்தாபகர் அருட்திரு
வில்லியம் ஓல்ட் அடிகளாருக்கு
மலர்மாலை அணிவித்து,
மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வுகளில்
மதப்பெரியார்களான புளியந்தீவு
மெதடிஸ்த திருச்சபையின்
சேகர முகாமைக்குரு வண. ஏ.
சாம் சுபேந்திரன், நாவட்குடா
மெதடிஸ்த திருச்சபைக் குரு
வண. எஸ். முருகுப்பிள்ளை,
கல்லூரியின் முன்னாள்
அதிபர் கே.ஜீ அருளானந்தம்,
பாடசாலை அபிவிருத்தி
சங்க செயலாளர் எந்திரி
வை. கோபிநாத், பிரதியதிபர்
எஸ். நந்தகோபால், பழைய
மாணவர் சங்கத் தலைவர்
எஸ். பகீரதன், குருளைச்
சாரண தலைவர் ந.பிரதீபன்,
ஆசிரியர்கள், குருளைச்சாரண
ஆசிரியர்கள், மாணவர்கள்,
சாரண மாணவர்கள்,
கலந்துகொண்டார்கள்.

(படங்களும் தகவலும்: க. விஜயரெத்தினம்,
ஏ.எச்.ஏ ஹுஸைன்)

# மழலையர் கலை விழா






கடந்த ஞாயிற்றுக்கிழமை (26) மாலை, பண்டத்தரிப்பு,
காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் இடம்பெற்ற மழலையர்
கலை விழாவின் காட்சிகள் சில;

(படங்களும் தகவலும்: சபா தனுஜன்)




## தமிழ்மொழி பாடநெறி

# சான்றிதழ் வழங்கல்

அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் பதவி நிலை
உத்தியோகத்தர்களுக்கு நிகழ்த்தப்பட்ட, இரண்டாம் மொழி
150 மணித்தியாலய தமிழ்மொழி பாடநெறியை நிறைவு
செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, திங்கட்கிழமை
(27) பதுளை மாவட்ட செயலகத்தில், பதுளை மாவட்ட
தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு உத்தியோகத்தர் முஷரப்
தலைமையில், பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த 154 சிங்கள
மொழிமூல அரச உத்தியோகத்தர்களுக்கு தமிழ்மொழி
பாடநெறியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும்
நிகழ்வு இடம்பெற்றது .

(படங்களும் தகவலும்: இரா சுரேஷ்குமார்)





# சாதனையாளர்களுக்கு பாராட்டி, கௌரவம்

தமிழீழ மக்கள் விடுதலை கழகம்,
கடந்தவாரம் காரைதீவில் நடத்திய
தளபதி அமரர் ம. சிவனேசனின் முதலாம்
ஆண்டு நிறைவு நிகழ்வில், தெற்காசிய,
தேசிய, மாகாண மட்டங்களில்
பிரகாசித்த சாதனையாளர்கள் பாராட்டி,
கௌரவிக்கப்பட்டனர். கழகத்தின்
அம்பாறை மாவட்ட பொறுப்பாளர்
ரவிச்சந்திரன் சங்கரி தலைமையில், காரைதீவு
விபுலானந்த மைதானத்தில் நடைபெற்ற இந்த
நிகழ்வில், யாழ். மாவட்ட பாராளுமன்ற
உறுப்பினரும், தமிழீழ விடுதலை கழகத்தின்
தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன்
உள்ளிட்ட அதிதிகள் கலந்துகொண்டனர்.

குண்டெறிதலில் மாகாண மட்டத்தில்
தங்கப் பதக்கம் பெற்ற பே. அனோஜன்,
ஹொக்கியில் தேசிய மட்டத்தில் த.
லவன், தெற்காசிய கராத்தே போட்டியில்
சௌ. பால்ராஜ், தேசிய மட்ட கராத்தே
போட்டியில் ப. சரோன் சச்சின், மாகாண
மட்ட கராத்தே போட்டியில் செல்வி.
கு அட்சயா, மாகாணமட்ட மல்யுத்தப்
போட்டியில் சு. அஜித் ராஜ், மாகாண
மட்ட பீச் கபடி போட்டியில் இ. நிரோஜன்
ஆகியோர் பொன்னாடை போர்த்தி நினைவுச்
சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மரணித்த சமூக செயற்பாட்டாளர் செ.
மணிச்சந்திரன் விசேடமாக விருது வழங்கி
கௌரவிக்கப்பட்டார். ஊடக துறைக்காக
ஜனாதிபதி விருது பெற்ற ஊடகவியலாளர்
வி.ரி. சகாதேவராஜா 'ஊடகமாமணி' என்ற
பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

(படங்களும் தகவலும்: காரைதீவு நிருபர் சகா)





விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் சனிக்கிழமை, 02 ஜூலை 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.